**2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 08ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 04.35 மணிக்கு தருமபுரி நகராட்சி அறிஞர் அண்ணா நகரமன்ற கூட்டரங்கத்தில் நடைபெற உள்ள அவசர கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திருமதி.மா.லட்சுமி**
**நகரமன்ற தலைவர்,**

**பொருள் : 01**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன், ஜுலை 2025ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் : 02**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9730/2025/SS1 நாள்.02.04.2025ல் தமிழ்நாடு நகர்புர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் பகுதி–2 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.168.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.84.50 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம்–1 சாலைகள் அமைக்கும் பணிக்கு Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.04.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | DSA CONSTRUCTION | 10.10% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.டி.எஸ்.எக்பால் | 15.01% மதிப்பீட்டை விட அதிகம் | – |

**அலுவலக குறிப்பு :**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட DSA CONSTRUCTION நிறுவனத்தின் 4.99% மதிப்பீட்டை விட அதிகம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் : 03**

தருமபுரி நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள், பொதுநிதி, குடிநீர் நிதி, கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தப்பணிகள், தருமபுரி நகராட்சியின் சாதனை மலர்கள் மற்றும் முக்கிய பிறமுகர்கள் வருகை போன்றவற்றினை விளம்பரப்படுத்த நாளிதழ்களுக்கும் மற்றும் அறிவுசார் மையத்திற்கு பெறப்படும் தினசரி நாளிதழ்களுக்கும் தொகை வழங்க வேண்டியிருப்பதால் அதற்காக ஏற்படும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 04**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9730/2025/SS1 நாள்.02.04.2025ல் தமிழ்நாடு நகர்புர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் பகுதி–2 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.168.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.83.50 இலட்சம் மதிப்பீட்டில் சிப்பம்–1 சாலைகள் அமைக்கும் பணிக்கு Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.04.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பெ.அண்ணாதுரை | 10.40% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.டி.எஸ்.எக்பால் | 15.01% மதிப்பீட்டைவிடஅதிகம் | – |

**அலுவலக குறிப்பு :**

1). வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட திரு.பெ.அண்ணாதுரை அவர்களின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் : 05**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9365/2025/பி1 நாள்.15.05.2025ல் கலைஞர் நகர்புறர மேம்பாட்டு திட்டம் 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் சாலைகள் அமைக்கும் பணிக்கு Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 28.04.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | DSA CONSTRUCTION | 10.00% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.டி.எஸ்.எக்பால் | 15.19% மதிப்பீட்டை விட அதிகம் | – |

**அலுவலக குறிப்பு :**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட DSA CONSTRUCTION, நிறுவனத்தின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் : 06**

நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9999/2025/SS2 நாள்.02.05.2025ல் தருமபுரி நகராட்சிக்கு மூலதன மானிய நிதி (CGF) இயக்கம் மற்றும் பராமரித்தல் நிதி (O&M DGF) 2025–2026ம் ஆண்டு திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கை மழைநீர் வடிக்கால்வாய் ரூ.99.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு Online மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 18.06.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி ஒப்புநோக்கு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. டி.எஸ்.ஜப்பார் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | DSA CONSTRUCTION | 2.40% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 0.06% குறைவாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட பணி திட்டப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் : 07**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள புற நகர் பேருந்து நிலையம் T.V.விளம்பரம் எடைபார்க்கும் இயந்திரம் தென்புறம் ஆண்டு குத்தகைக்குவிட 17.06.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அன்றைய தினம் கீழ் கண்டவாறு இரண்டு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பெற்றுள்ளது.

| குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| புற நகர் பேருந்து நிலையம் T.V.விளம்பரம் | திரு.G.இராஜேந்திரன் த/பெ கோவிந்தன் | ரூ80000/- |
| | திரு.R.உதயகுமார் த/பெ இராஜேந்திரன் | ரூ.74367/- |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.G.இராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு குத்தகை தொகைமற்றும் மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையைவிட கூடுதலாக உள்ளது.எனவே திரு.G.இராஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுதி எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்ச்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக 1.07.2025 முதல் குத்தகைதாரருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ததையும் மன்றம்

பொருள் : 08

18.06.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு ஆய்வு கூட்டம் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்தில் மதிப்பீற்குரிய பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் தருமபுரி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் உரிய கவனம் செலுத்தி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வழிகாட்டுதலின் படி பணி மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். மேலும் நுண் உர மையங்களில் வெளியே கொட்டி வைக்கப்பட்டுள்ள அரைத்த மக்கிய உரமக்கிய கழிவுகளை உடன் அப்புறப்படுத்தி நுண் உரமையத்தின் பகுதிகளை தூய்மையாக பராமரிக்க ஆலோசனை தெரிவித்தனர். மதிகோண்பாளையம் நுண் உரமையம் பச்சையம்மன் கோவில் நுண் உரமையம் மற்றும் சந்தைப்பேட்டை நுண் உரமையங்களில் தினசரி பெறப்படும் மக்கும் கழிவுகள் அரைத்து உரமாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு மக்கும் கழிவுகள் அரைத்து மக்கிய பிறகு விவசாயிகளுக்கு வழங்கிய பணி நடைபெற்றும் போதுமான வரவேற்பு இல்லாத காரணத்தால் உரமானது தேக்கி வைக்கப்படுகிறது. கீழ்கண்ட MCC மையங்கள் மதிகோண்பாளையம் நுண் உர மையத்தில் 1600MT, சந்தைப்பேட்டையில் 800MT மற்றும் பச்சையம்மன் கோவில் நுண் உர மையத்தில் 800MT அளவு மக்கிய கழிவு உரங்கள் நுண் உரமையத்தின் வெளியே சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு குழு மற்றும் கண்காணிப்பு குழு ஆய்வுக்கூட்டத்தில் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மதிப்பிற்குரிய பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைப்படி நுண் உர மையங்களில் உள்ள மக்கிய கழிவு உரங்களை உடன் அப்புறப்படுத்தி தடங்கம் உரத்திடலில் சேமித்து வைக்கவும், தினசரி தயார் செய்யப்படும் உரம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கியதின் படியும், மதிகோண்பாளையம் நுண் உரமையங்களில் உள்ள மக்கிய உரத்தினை தடங்கம் உரக்கிடங்கிற்கு தனியார் வாடகை டிப்பர் லாரிகள் மற்றும் JCB வாகனங்கள் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியினை அகற்றிட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் – 2023 பிரிவு 57–ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் மூலம் பணியினை ரூ.11.80 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொண்டதையும் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 09**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 10 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் குமாரசாமிபேட்டை தட்சிணாமூர்த்தி மடம் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பின்புறம் குடியிருப்பு பகுதியில் LED உயர்மின் கோபுர விளக்கு அமைத்தல் பணிக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள், மேற்கொள்ள இணையதளம் (Online) மூலமாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 07.07.2025 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விவரம் |
|---|---|---|
| 1. | M/S RAJ TRADERS DHARMAPURI | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/S VENNILA ROAD FINISER AND ENGINEERING CONTRACTOR DHARMAPURI | 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட M/S RAJ TRADERS DHARMAPURI நிறுவனத்தின் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணி திட்ட பணி என்பதால் பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியிருப்பதால் நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் : 10**

தருமபுரி நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய்கள் மற்றும் குடிநீர் மெயின் குழாய் பழுதுகள் அடிக்கடி ஏற்படும் சூழ்நிலை இருப்பதால் பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்ய வேண்டும் என்று நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, வார்டு எண் 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் குழாய்கள் மற்றும் குடிநீர் மெயின் குழாய் பழுதுகள் பராமரிப்பு பணிகளை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் : 11

அரசு ஆணை (நிலை) எண்.77 பள்ளி கல்வித்துறை நாள் 13.04.2015ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறகளை மகளிர் சுய உதவி குழு அல்லது தனியார் சேவை வழங்கும் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தொகையின கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட அரசு அவ்வையாளர் மகளிர் மேல்நிலைபள்ளியில் உள்ள கழிறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் தருமபுரி அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.10607/2024/இ1 நாள்.0807.2024ல் தெரிவித்துள்ள தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.410/ என நிர்ணயம் செய்யப்பட்டதின் பெயரில் மூன்றாண்டுக்கு மேற்கண்ட பள்ளி கழிவறையினை தூய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தருமபுரி அதியமான் மகளிர் முன்னேற்ற சங்கத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை தொடர்ந்து 09.09.2024ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமூ.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.042025 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்கு தினக்கூலியினை கீழ்கண்டாறு மறு நிர்ணயம் செய்து 1.04.2025 மாதத்திற்கு கூடுதல் நிலுவை தொகை வழங்கவும் மற்றும் 01.05.2025 முதல் 31.08.2025 வரை ரூ.410ல் இருந்து ரூ.541/ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பழைய தினக்கூழி ஊதியம் ரூ. | புதிய தினக் கூலி ஊதியம் ரூ. | வித்தியாச தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 410.00 | 541.00 | 131.00 |

அலுவலக குறிப்பு :

1). தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமூ.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி தொகைனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட கூடுதல் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 12

தருமபுரி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம்–2022–2023ம் ஆண்டின் கீழ் வார்டு எண்.09 அரிசந்திரன் மயானத்தில் ரூ.142.46இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மை தருமபுரி தன்னார்வர் தொண்டு நிறுவனம் அவர்கள் கடிதம் மூலம் இசைவு தெரிவித்துள்ளதை தொடர்ந்து நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மை தருமபுரி தன்னார்வர் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 13

தருமபுரி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி இந்நகரில் உள்ள அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து பெறப்படும் மக்காத கழிவுகளை தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்கள் நியமனம் செய்து தரம் பிரித்து அவர்களது சொந்த செலவில் Bailing செய்து சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பும் பணிக்கான ஒப்பந்தபுள்ளிகள் 01.08.2025ல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப்படுகிறது.

| விவரம் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் விலை விகிதம் (Per Tonne) | |
|---|---|---|
| | Murugappa Traders – சேலம் | Sri Balaji Industries, பழனி, திண்டுக்கல் |
| மறுசுழற்சிக்கு பயன்படாத மக்காத கழிவுகளை, ஒப்பந்ததாரர் செலவில் தூய்மை பணியாளர்கள் பயன்படுத்தி பண்டல் கட்டி சிமெண்ட் தொழிற்சாலை மற்றும் மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பும் பணி | Rs.3000/ Per Tonne | Rs.3100/ Per Tonne |

அலுவலக குறிப்பு :

1. பொது சுகாதார பணி (ம) திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்த புள்ளி கோரியதனை மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Murugappa Traders Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 14**

நகராட்சி பகுதிகளில் நகர்மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் பள்ளி வளாகங்களில் தெருநாய்கள் தொல்லை அதிகமாக இருப்பதினால் தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்யும் பணிக்கு THE INTERNATIONAL TRUST OF PEACE –சென்னை என்ற தொண்டு நிறுவனம் மூலம் பணி செய்திட அனுமதி கேட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. பொது மக்கள் நலன் கருதி விலங்குகள் நலவாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு உட்பட்டு THE INTERNATIONAL TRUST OF PEACE –சென்னை என்ற தொண்டு நிறுவனம் மூலம் தெருநாய்கள் கருத்தடை செய்யும் பணி மற்றும் ரேபிஸ் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கிடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.9.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 15**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.9730/2025/எஸ்எஸ்1 நாள்.30.05.2025ல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்–III 2025–2026ன் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.231.60 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை மேற்கொள்ளப்பட்ட சாலைகள் புணரமைப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.59.80 இலட்சம் மதிப்பீட்டில் PACKAGE–3 க்கான பணிகளுக்கு Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.06.2025 அன்று வரப்பொற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியிலை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.எக்பால் | 7.00% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | DSA CONSTRUCTION | 15.00% மதிப்பீட்டை விட அதிகம் | |

**அலுவலக குறிப்பு :**

1). வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திரு.டி.எஸ்.எக்பால் அவர்களின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அசவர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 16**

தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான JCB இயந்திரம் வாங்கப்பட்டு சமார் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் மேற்கண்ட வாகனத்தினை பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. எனவே தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தினசரி 28MT அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றினை தடங்கம் உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு வருகின்றது. உரக்கிடங்கில் உள்ள குப்பைகளில் அடிக்கடி தீ ஏற்பட்டு அனைக்க நகராட்சியிடம் போதுமான JCB இயந்திரம் இல்லாததால் தீயினை உடனடியாக அனைக்க முடிவதில்லை.மேலும் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடை பகுதி-2 மற்றும் திட்டப்பணிகள் நடைபெற்று வரும் இடத்தில் அவசரத்திற்கு பணிகள் மேற்கொள்ள போதுமான JCB வாகனம் இல்லாததால் வெளியில் இருந்து JCB வாகனத்தினை அமர்த்தி பணிகள் மேற்கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 17**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.9730/2025/எஸ்எஸ்1 நாள்.30.05.2025ல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்-III 2025-2026ன் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.231.60 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை மேற்கொள்ளப்பட்ட சாலைகள் புணரமைப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.59.80 இலட்சம் மதிப்பீட்டில் PACKAGE-4 க்கான பணிகளுக்கு Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.06.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியிலை கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பெ.அண்ணாதுரை | 9.99% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | DSA CONSTRUCTION | 15.11% மதிப்பீட்டை விட அதிகம் | - |

**அலுவலக குறிப்பு :**

1) வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திரு.பெ.அண்ணாதுரை அவர்களின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அசவர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 18**

தருமபுரி நகராட்சி வார்டு எண்.25 சாலை வினாயகர் சாலையில் இருந்து பச்சியம்மன் கோவில் சாலை சந்திப்பு வரை உள்ள சாலையில் போதிய மின் விளக்குகள் இல்லாமல் இரவு நேரங்களில் பொதுமக்கள் வாகன ஓட்டில் அப்பகுதியில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் இப்பகுதியில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், நீதிமன்றம், கோட்டாசியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, வட்டாச்சியர் அலுவலகம், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், கோட்டாச்சியர் அவர்கள் இரவு நேரங்களில் சென்று வர மிகவும் சிரமாக உள்ளது. எனவே, வட்டாச்சியர் அலுவலகம் முதல் BBC திருமண மண்டபம் வரை சென்டர் மீடியன் விளக்குகள் அமைத்து தருமாறு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் நேரடியாக கோரியதின் பெயரில் மேற்கண்ட இடத்தில் சென்டர் மீடியன் மின் விளக்குகள் அமைக்கும் பணியினை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 19**

தருமபுரி நகராட்சி 33 வாடுகளில் முதற்கட்டமாக 19 வார்டுகளில் 2013ம் ஆண்டு பாதாள சாக்கடை திட்டம்–1 செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட 19 வார்டுகளில் சேகரிக்கப்படும் கழிவு நீரினை காந்திபாளையத்தில் உள்ள சுத்தகரிப்பு நிலையத்தில் சுத்தகரிக்கப்பட்டு சனத்குமார் நதியில் விடப்படுகிறது.

பாதாள சாக்கடை திட்டம்–1 நடைமுறைக்கு வந்து 12 வருடங்கள் ஆன நிலையில் PS மற்றும் STP நிலையத்தில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக 3 எண்ணிக்கை சுத்தகரிப்பு கிணற்றிலும் 5.50, 3mm திலும் 3wm அளவுக்கு மண் தேங்கியிருந்து, கிணற்றிலுள்ள மோட்டார் பம்புகளில் குப்பைகள் முதலியனவை அடைத்துக்கொண்டு பம்புகளில் முழு அளவில் (FULL EFFI) இயக்க முடியாத நிலையில் உள்ளது.எனவே, மேற்கண்ட 3 எண்ணிக்கை கிணற்றையும் தூர்வாரி (SILT மண்) DESILTING சுத்தம் செய்து அந்த கழிவுநீரை முழ அளவில் சுத்தகரிப்பு செய்திட வேண்டியிருப்பதாலும் பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியினை அவசர அசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் – 2023 பிரிவு 57–ன் கீழ்மேற்கண்ட பாதாள சாக்கைடை சுத்தகரிப்பு நிலையத்தினை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் M/S TAMILNADU WATER SUPPLY & DRAINAGE SYSTEM நிறுவனத்தின் மூலம் பணியினை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் மேற்கொண்டதையும் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 20**

தருமபுரி நகராட்சி பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு 2025-ம் ஆண்டிற்கான பசுமை வரி, சாலை வரி செலுத்தி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் தகுதி சான்று பெறப்பட வேண்டும். அதற்கான தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 21**

தருமபுரி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் படி மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகளை அகற்ற நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அளித்த அனுமதி கடிதம் ந.க.எண்.34648/2022/EA2-SWM-10 நாள்: 10.01.2023-ன்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிகளை தனியார் மயமாக்கிட கருத்துரு அனுப்பியபொழுது தருமபுரி நகராட்சியில் நிரந்தர தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை 110 என இருந்தது. அதனடிப்படையில் தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு ஆணை பெறப்பட்டது. நகர் மன்ற தீர்மான எண்: நாள: 02.05.2025 -ன் படி 22 தூய்மை பணியாளர் பணியிடங்களுக்கான பணியாளர்கள் அவுட்சோர்சிங் முறையில் பெற்று 02.05.2025 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 30.06.2025 ல் மேலும் 6 தூய்மை பணியாளர்கள் பணிஓய்வு பெற்றதினால் தற்போது நிரந்தர பணியாளர் எண்ணிக்கை 82 என வெகுவாக குறைந்துள்ளது. எனவே பொது சுகாதார பணி தடையின்றி நடைபெறவும் நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி தற்போது தூய்மை பணி செய்து வரும் நிறுவனத்திற்கு மேலும் 3 மாதங்களுக்கு 28 தூய்மை பணியாளர்கள் வழங்கும் பணி உத்தரவிற்கும், அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூபாய் 9.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.08.2025 முதல் பணி செய்திட நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 22

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி டவுன் பள்ளியில் செயல்பட்டு வரும் காலை உணவு திட்டத்தை மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்கள் ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்ததில் காலை உணவு சமையல் செய்யும் கட்டிடத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதனை உடனடியாக செய்யுமாறு தெரிவித்துள்ளார். எனவே, மாவட்ட ஆட்சியர் தருமபுரி அவர்களின் ஆய்வின் போதும் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படியும் காலை உணவு சமையல் கூடத்தினை மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனம் ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதியும், பள்ளி மாணவ, மாணவியர்களின் காலை உணவு திட்டத்தின் நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் ஏற்னவே தருமபுரி நகராட்சியில் ஒப்பந்தப்பணிகள் செய்து வரும் திரு.K.கனகராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு கல்வி நிதியின் கீழ் ரூ.6.50 இலட்சம் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 23

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம். வார்டு–ஏ. பிளாக்–17. நகரளவு எண்.7/3–ல் 0.83 ஏக்கர் (3350.00 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் திரு. அன்பு த/பெ ராஜகிருஷ்ணன என்பவர்கள் அமைக்கப்பட உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.UYQ2SITV/2024/TCP நாள்.25.11.2024–ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்டஅனுமதி எண் SWP/DTCP/DHARMAPURI/LAYOUT APPROVAL NO.148/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு மனுதாரர் தானப்பத்திரம் ஆவணம் எண்.2788/2025, நாள்.13.11.2024–ன் படி பதிவு செய்து நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அசல் தானப்பத்திர நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவில் புதியதாக தார்சாலை. மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் பகீர்மான குழாய் நல்ல முறையில் அமைப்பட்டுள்ளதாக, நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் 28.07.2025–ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதியும். மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்கான உரிய கட்டணங்கள் அனைத்தும் நகராட்சிக்கு செலுத்திய பின்னர் மனைப்பிரிவிற்கு நகராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் மனைப்பிரிவினை அங்கீகரிக்கலாம்.

பொருள் : 24

அரசு ஆணை (நிலை) எண்.77 பள்ளி கல்வித்துறை நாள் 13.04.2015ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர் சுய உதவி குழு அல்லது தனியார் சேவை வழங்கும் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தொகையின கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட காமாட்சியம்மன் தெரு, குப்பாண்டி தெரு, இரயில்வே லையின் பள்ளி, அப்பாவு நகர் பள்ளி, டவுன்ஹால், விருபாட்சிபுரம், டவுன் தொடக்கப்பள்ளிகளில் உள்ள கழிறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ள மாவட் ஆட்சியர் தருமபுரி அவர்களின் செயல் முறைகள் உத்தரவு ந.க.எண்.10607/2024/இ1 நாள்.0807.2024ல் தெரிவித்துள்ள தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.410/– என நிர்ணயம் செய்யப்பட்டதின் பெயரில் மூன்றாண்டுக்கு மேற்கண்ட பள்ளி கழிவறையினை தூய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தருமபுரி அதியமான் மகளிர் முன்னேற்ற சங்கத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை தொடர்ந்து 09.09.2024ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.042025 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்கு தினக்கூலியினை கீழ்கண்டாறு மறு நிர்ணையம் செய்து 1.04.2025 மாதத்திற்கு கூடுதல் நிலுவை தொகையினை வழங்கவும் மற்றும் 01.05.2025 முதல் 31.08.2025 வரை ரூ.410ல் இருந்து ரூ.541/ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பழைய தினக்கூலி ஊதியம் ரூ. | புதிய தினக் கூலி ஊதியம் ரூ. | வித்தியாச தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 410.00 | 541.00 | 131.00 |

அலுவலக குறிப்பு :

1). தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட கூடுதல் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 25**

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 2025–2026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. நகராட்சி பகுதிகளில் நகராட்சி சார்பாக அனைத்து முகாம்கள் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுடன் இணைந்து முகாம்கள் நடந்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி நகராட்சி சார்பில் ஜீலை 2025 முதல் அக்டோபர்–25 வரை முகாம்கல் நடைபெறவுள்ளது. முகாமிற்கு வருகை தரும் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மதியம் உணவு அளிக்க வேண்டியிருப்பதால் அதற்கான தோரான செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 26**

தருமபுரி நகராட்சி வார்டு எண்.26 கொள்ளஹள்ளி பகுதியில் குடிநீர் வசதிகள் இயலாததால் குடிநீர் சீரான முறையில் வினியோகம் செய்ய இயலவில்லை இதனால் பொதுமக்களிடமிருந்த புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தினை நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் அங்குள்ள கைபம்பு ஒன்று பயன்படத்தப்படாமல் உள்ளது. இதில் சிறிய மின்மோட்டார் அமைத்தால் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய ஏதுவாக இருக்கும். எனவே, மேற்கண்ட இடத்தில் உள்ள கைபம்பில் மினிபவர்பம்பு அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 27**

தருமபுரி நகராட்சி நகரபேருந்து நிலையம் மற்றும் புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகள் பேஷன்கள் மிகவும் பழுதடைந்தும், கழிவறைகளின் மேற் கூரை, கதவுகள், தண்ணீர் குழாய்கள் மற்றும் மின் ஒயர்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்தப்பட முடியாமல் உள்ளது. எனவே, மேற்கண்ட இடங்களில் உள்ள கட்டண கழிப்பறைகளை புணரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.16.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 28**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/இஏ2 நாள்.13.05.2025ல் 15வது நிதிக்குழு மான்ய திட்டம் 2025-2026 (UNTIED GRANT) கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு பணிக்கு அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.2030/2025/பி1-4 நாள் 16.05.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் மேற்கண்ட பணிக்கு Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.06.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியிலை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பெ.அண்ணாதுரை | 10.10% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | DSA CONSTRUCTION | 15.14% மதிப்பீட்டை விட அதிகம் | – |

**அலுவலக குறிப்பு :**

1). வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திரு.பெ.அண்ணாதுரை அவர்களின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அசவர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 29**

தருமபுரி நகராட்சி பகுதியில் சுற்றித்திரியும் தெருநாய்களை கட்டுப்படுத்தும் பணி செய்திட வேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளது. உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படியும், விலங்குகள் நலவாரியத்தின் கடிதத்தின் படியும் நாய்களுக்கான கருத்தடை செய்யும் அ-றுவை சிகிச்சை கூடத்திருக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் Spay Hook, Veterinary Surgical Hydraulic Table, Mobile OT Light, Auto Clave, Dressing Bin, Diathermy 400W, SS Strucher Trolley, SS Instrument Trolley, Artery Forceps ST6, Allies Forceps, Needle Holder, Dissecting Forceps Thoothed, Mayos Scissor, Kidney Tray and Etc., போன்ற இதர உபகரணங்கள் வாங்கி வழங்கிட ஆகும் தோராய செலவீனம் ரூ.21.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள் விற்பனை செய்யும் Staar Surgicals தருமபுரி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு வருவாய் நிதியின் கீழ் ரூ.20,93,788/-ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 30

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள இராஜகோபால் பூங்கா நுழைவு கட்டணம் ஆண்டு குத்தகைக்குவிட 17.06.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அன்றைய தினம் கீழ் கண்டவாறு ஐந்து எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பெற்றுள்ளது.

| குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| இராஜகோபால் பூங்கா நுழைவு கட்டணம் | திருமதி.வளர்மதி க/பெ வடிவேல் | ரூ557500/- |
| | திரு.ஆதிமூலம் த/பெ பெரியண்ணன் | ரூ.379000/- |
| | N.கிருஷ்ணமூர்த்தி த/பெ நஞ்சுண்டன் | ரூ.398899/- |
| | திரு.M.Y. முகமது இனாயத்துல்லா | ரூ.390999/- |
| | திரு.குழந்தைசாமி த/பெ மல்லுகவுண்டர் | ரூ.457000/- |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப் புள்ளிகளில் திருமதி.வளர்மதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு குத்தகை தொகைமற்றும் மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையைவிட கூடுதலாக உள்ளது.எனவே திருமதி.வளர்மதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுதி எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக 1.07.2025 முதல் குத்தகைதார்ருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 31

தருமபுரி நகராட்சிக்கு சொந்தமான பஞ்சப்பள்ளி குடிநீர் திட்டத்தின் மூலம் நகராட்சிக்க உட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வரை பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பஞ்சப்பள்ளி குடிநீர் பிரதான குழாய் பாலக்கோடு, மாரண்டஹள்ளி, மல்லாபுரம், புலிகரை மற்றும் பழைய தருமபுரி பகுதியில் குடிநீர் பிரதான குழாயில் உடைப்பு ஏற்பட்டு ஆங்காங்கே குடிநீர் வீனாகி வருவதால் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக வழங்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் கொடுக்க, குடிநீர் பிரதான குழாய் உடைப்பினை சரி செய்ய உடனடியாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் தருமபுரி நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தாரர் திரு.D.S.ஜப்பார், மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் நிதியின் கீழ் ஒப்பந்தாரர் அவர்களுக்கு தொகை ரூ.7,74,000/-ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 32

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.9730/2025/எஸ்எஸ்1 நாள்.30.05.2025ல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்- III 2025-2026ன் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.231.60 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை மேற்கொள்ளப்பட்ட சாலைகள் புணரமைப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் PACKAGE-1 க்கான பணிகளுக்கு Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.06.2025 அன்று வரப்பொற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியிலை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | DSA CONSTRUCTION | 7.50% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 15.00% மதிப்பீட்டை விட அதிகம் | |

அலுவலக குறிப்பு :

1). வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட DSA CONSTRUCTION நிறுவனத்தின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அசவர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 33

அரசு ஆணை(நிலை) எண்.77 பள்ளி கல்வித்துறை நாள் 13.04.2015ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர் சுய உதவி குழு அல்லது தனியார் சேவை வழங்கும் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தொகையின கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட மதிகோண்பளையம், கோட்டை உருது, சந்தைபேட்டை, சாலைவினாயர் பள்ளி, குமாரசாமிப்பேட்டை, அன்னசாகரம் பள்ளிகளில் உள்ள கழிறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ள மாவட் ஆட்சியர் தருமபுரி அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண்.10607/2024/இ1 நாள்.0807.2024ல் தெரிவித்துள்ள தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.410/– என நிர்ணயம் செய்யப்பட்டதின் பெயரில் மூன்றாண்டுக்கு மேற்கண்ட பள்ளி கழிவறையினை தூய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தருமபுரி அதியமான் மகளிர் முன்னேற்ற சங்கத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை தொடர்ந்து 09.09.2024ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.042025 முதல் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்கு தினக்கூலியினை கீழ்கண்டாறு மறு நிர்ணயம் செய்து 01.04.2025 மாதத்திற்கு கூடுதல் நிலுவை தொகை வழங்கவும் மற்றும் 01.05.2025 முதல் 31.08.2025 வரை ரூ.410ல் இருந்து ரூ.541/ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பழைய தினக்கூ ஊதியம் ரூ. | புதிய தினக் கூலி ஊதியம் ரூ. | வித்தியாச தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 410.00 | 541.00 | 131.00 |

**அலுவலக குறிப்பு :**

1). தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி தொகைனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட கூடுதல் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 34

தருமபுரி நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு புதியதாக பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:33702/2024/EA1 நாள்:17.03.2025–ல் தெரிவித்துள்ளவாறு பாதாள சாக்கடை உபவிதிகள் கீழ்கண்டவாறு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

## பாதாளசாக்கடை திட்டம் உபவிதிகள்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடுசட்டம் 1999) பிரிவு 199 இன் துணைப்பிரிவு (1) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தருமபுரி நகராட்சி மன்றம், பாதாளசாக்கடை இணைப்பை ஒழுங்குபடுத்துவதற்காக இயக்குநரின் ஒப்புதலுடன் பின்வரும் துணைச்சட்டங்களை இதன் மூலம் உருவாக்குகிறது.

1. (1) பாதாளசாக்கடை இணைப்புகளைப் பெறுவதற்கு, கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது கட்டிடத்தின் குத்தகைதாரர்/வாடகைதாரர்/ உரிமையாளரின் ஒப்புதலுடன், இணைப்பில் உள்ள படிவம் 1" இல் ஆணையரிடம் ரூ.100/– விண்ணப்பக் கட்டணங்கள், படிவம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் கட்டிடத்திற்கான பத்திரத்தின் நகல், சொத்துவரி ரசீதுபோன்ற சொத்துவிவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

   (2) மாநகரப்பொறியாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி விண்ணப்பத்தை நேராய்வு செய்து சாலை மறு சீரமைப்பு ஆய்வு மற்றும் மையத்திற்கான கட்டணங்களுடன் ஆணையாளர் உத்தரவிட்டபடி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் அட்டவணை –1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி கட்டிட பரப்பளவினைப் பொறுத்து வைப்புத் தொகையை செலுத்த உரிமையாளர் / குத்தகைதாரர் /வாடகைதாரருக்கு அறிவுறுத்த வேண்டும்.

   (3) அதன் பிறகு வீட்டு சேவை இணைப்பை வழங்க ஆணையர் படிவம் 2 இல் உத்தரவைப் பிறப்பிப்பார்.

   (4) விண்ணப்பப் பதிவு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை வரிசையில், உரிமையாளர் / குத்தகைதாரர் / வாடகைதாரரால் நகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் பயிற்சி பெற்ற பிளம்பர்ஸ் /ஒப்பந்ததாரர் மூலம் இணைப்புகள் வழங்கப்படும்.

2. (1) புதிய பாதாளசாக்கடை அமைப்பில் பாதாள சாக்கடை இணைப்புகளைப் பெறுவதற்கு, எந்த வொரு விரிவான பாதாள சாக்கடை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக வழங்கப்படும் அல்லது வழங்கப்படும். கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது கட்டிடத்தின் குத்தகைதாரர் உரிமையாளரின் ஒப்புதலுடன் இணைப்பில் உள்ள படிவம் 1" இல் ஆணையரிடம் ரூ.100/– விண்ணப்பக் கட்டணம், படிவம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் விற்பனைப் பத்திரத்தின் நகல்,

சொத்து வரி செலுத்துதல் போன்ற சொத்து விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(2)அதன் பிறகு பாதாளசாக்கடை இணைப்பை வழங்க ஆணையர் படிவம் 2 இல் உத்தரவைப் பிறப்பிப்பார்.

(3)நகராட்சி அரசு நிறுவனமான தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் ஈடுபடுத்தப்பட்ட குடிமைப் பணி ஒப்பந்ததாரர் மூலம் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். நகராட்சி பொறியாளரின் ஆலோசனையின் பேரில், பாதாளசாக்கடை மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தின் கீழ் UGS சேவை இணைப்புகளை ஒப்பந்ததாரர் வழங்க வேண்டும்.

(4) நகராட்சிப் பொறியாளர், ஆணையர் உத்தரவிட்ட படி, அட்டவணை–1 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, பரப்பளவை பொறுத்து வைப்புத் தொகையை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் செலுத்துமாறு விண்ணப்பதாரர்களுக்கு இணையாக அறிவுறுத்த வேண்டும். அனைத்து மதிப்பிடப்பட்ட சொத்துக்களும் (வீட்டு மற்றும் வீடு ஆல்லாதவை) எந்த குறைபாடுகளும் இல்லாமல் பாதாள சாக்கடை சேவை இணைப்புகளுடன் வழங்கப்படுவதை நகராட்சிப் பொறியாளர், உறுதி செய்ய வேண்டும்.

3. தேவையான ஆவணங்களுடன் பெறப்பட்ட விண்ணப்பம் பாதாள சாக்கடை இணைப்பை வழங்குவதற்கு மட்டுமே பரிசீலிக்கப்படும்.

4. நகராட்சி வீட்டு மற்றும் வீட்டு உபயோக மற்ற இணைப்புகளுக்கு அட்டவணை – 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களின் படி கட்டிடத்தின் பரப்பளவை பயனாளர் கட்டணங்கள் நிலையான விகித அடிப்படையில் விதிக்கப்படும்.

(1) நகராட்சியில் பாதாளசாக்கடை கழிவு நீர் அமைப்பு வசதி செய்யப்பட்ட இடங்களில், வீடுகள் / கட்டிடங்கள் மற்றும் பிறபயன்பாடுகள் நகராட்சியிடம் அனுமதி பெற்ற பிறகு, இயந்திரதுளை / சேகரிப்பு அமைப்புடன் இணைக்க தேவையான உள் குழாய்களுடன் நிலத்தடி கழிவுநீர் அமைப்பு சேவை இணைப்பைப் பெற வேண்டும்.

(2)நகராட்சியில் பாதாளசாக்கடை அமைப்பு வசதி இல்லாத பகுதியில், வீடுகள், கட்டிடங்கள் மனித கழிவுகள் மற்றும் பயனார்களால் உருவாக்கப்படும் கழிவு நீரை சேகரித்து சேமித்து வைக்க ஊடுருவ முடியாத செப்டிக் தொட்டியைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் நகராட்சி உரிமம் பெற்ற கழிவுநீர் வாகன ஓட்டுனர் மூலம் அவற்றை சரியான நேரத்தில் அப்புறப்படுத்த வேண்டும். நகராட்சி ஆணையரின் அனுமதியுடன், உரிமம் பெற்ற கழிவுநீர் வாகன ஓட்டுனர்கள் தனிப்பட்ட வீடுகள். மனித கழிவுகள் சேகரமாகும் தொட்டிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட கழிவு நீரை நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட STP/ FSTP –க்கு அப்புறப்படுத்த வேண்டும். மற்றும்

5 (1) நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தவும். நீர் மட்டத்தை பராமரிக்கவும். பாதாள சாக்கடை கழிவு நீர் அமைப்பில் மழைநீர் நுழைவதைத் தடுக்கவும். வீடுகள் / கட்டிடங்களின் உரிமையாளர்களால் வளாகத்திற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்பு நிறுவப்பட வேண்டும். மழைநீர் சேகரிப்பு அமைப்பு நகராட்சி பொறியாளர்களின் ஆலோசனையுடன் கட்டப்பட வேண்டும்.

வீட்டு சேவை கழிவுநீர் இணைப்பை அனுமதிப்பதற்கு முன்பு, வீடுகள் / கட்டிடங்களின் வளாகத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

(2) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், சேகரிக்கப்பட்ட மழை நீர் கழிவுநீர் அமைப்பின் ஆய்வு அறைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் கட்டப்பட வேண்டும். இந்த மேற்கூறிய கட்டமைப்பு நகராட்சி பொறியாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி கட்டப்பட வேண்டும்.

6. குளியலறை மற்றும் சமையலறை போன்றவற்றிலிருந்து வரும் கருப்பு மற்றும் சாம்பல் நிற நீரைச் சேகரிக்கவும், சேகரிக்கப்படும் கழிவு நீரை நகராட்சியால் நிறுவப்பட்ட பாதாள சாக்கடை அமைப்பில் வெளியேற்றவும் உள் குழாய் கட்டமைப்புகள் கட்டப்பட வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019 இல் வழங்கப்பட்ட விவரக் குறிப்புகளின் படி வடிகால் அமைப்பு கட்டப்பட வேண்டும்.

7.நிலத்தடி கழிவு நீர் குழாய் நகராட்சியால் அறிவுறுத்தப்பட்ட சேகரிப்பு அமைப்புடன் கழிவு நீர் குழாயை இணைப்பதற்கு முன், முறையான உள் குழாய் மற்றும் காற்று வடிகால் குழாய் உள்ளிட்ட தொடர்புடைய உள் கட்டமைப்புகளுடன் வீடுகளின் வளாகத்திற்குள் இருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டு சேவை இணைப்பிலும் கல்லி பொறி வழங்கப்பட வேண்டும். மேலும் பட்டறையில், பேக்கரி மற்றும் மருத்து வமனைகள் கிரீஸ் பொறி மற்றும் எண்ணெய் பொறி வழங்கப்பட வேண்டும்.

8 ஆய்வு அறை மற்றும் மணிப் பொறி / பிட் பொறி ஆகியவை நகராட்சிப் பொறியாளர்களின் பரிந்துரையின் படி மேல் மூடியால் மூடப்பட வேண்டும்.

9 வீட்டு சேவை இணைப்பு, சேகரிப்பு குழாய் நகராட்சியின் நிலத்தடி உள் கட்டமைப்பின் சேகரிப்பு அமைப்புடன் பொருத்தமான சாய்வு மற்றும் வளைவுகளுடன் இணைக்கப்பட வேண்டும். இதனால் வீட்டு கழிவுநீரை எந்த அடைப்பும் இல்லாமல் அமைப்பு / இயந்திர துளைக்கு கொண்டு செல்ல முடியும். குறிப்பாக, நகராட்சி கழிவுநீர் அமைப்புடன் இடை இணைப்பு செங்குத்தாக கிடை மட்டமாக செய்யப்படக் கூடாது

10 அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் / குடியிருப்பாளர்கள் / உரிமையாளர்கள் மற்றும் அதிகளவில் கழிவு நீர் உற்பத்தி செய்யும் பயனாளர்கள் தங்கள் வளாகத்திற்குள் ஒரு சிறிய அளவிலான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவி, நிலத்தடி கழிவு நீர் அமைப்பின் அருகிலுள்ள இயந்திர துளையுடன் இணைக்க வேண்டும்.

11 நிலத்தடி கழிவு நீர் சேகரிப்பு அமைப்பு ஒரு சுவரைக் கடந்து அல்லது சுவரின் அடியில் கட்டப்பட வேண்டியிருந்தால், கழிவுநீர் குழாயின் மேல் சுவர்கட்டுவதால் பாதாள சாக்கடை குழாய் சேதமடையாமல் கழிவுநீர் செல்லும் குழாயின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், நகராட்சி பொறியாளர்கள் பரிந்துரைத்த படி, சரியான வளைவுடன் வலுவூட்டப்பட்ட சிமெண்ட் கான்கிரீட்டைப் பயன்படுத்தி சேகரிப்பு அமைப்பு கட்டப்பட வேண்டும்.

12 கழிவுநீர் சுமந்து செல்லும் / சேகரிக்கும் கழிவு நீர், இரண்டு இணைப்புப் புள்ளிகளுக்கும் இடையே குறைந்த பட்சதூரத்தைப் பராமரிப்பதன் மூலம்.

நகராட்சி நிலத்தடி கழிவுநீர் அமைப்புடன் இணைக்கும் வகையில், சொத்தின் சுற்றுச் சுவர் வரை வளாகத்திற்குள் அமைக்கப்பட வேண்டும்.

13 ஏற்கனவே உள்ள வீடுகளில் கழிப்பறை இல்லாத போது, திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தவிர்க்க கழிப்பறைகளைக்கட்டி, பாதாளசாக்கடை அமைப்பில் இணைக்க வேண்டிய பொறுப்பு வீட்டு உரிமையாளரிடம் உள்ளது.

14. ஒரு ஷாப்பிங் வளாகத்தில் தனி சிறுநீர் கழிப்பிடம் மற்றும் கழிப்பறை அறை இல்லாத போது, பொதுவான கழிப்பறை கட்டப்பட்டு, பாதாளசாக்கடை அமைப்பில் அருகிலுள்ள இயந்திர துளையுடன் இணைக்கப்பட வேண்டும்.

15 நகராட்சி பொறியாளர்களின் பரிந்துரையின் படி, கழிவு நீர் பாதையில் ஒரு பொறி, கிராட்டிங் பொருத்தப்பட வேண்டும்.

16. கட்டிடம் / வளாகத்தின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் எந்த நேரத்திலும் நகராட்சி பொறியாளர்கள் ஆய்வு செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

17. எந்த வொருவளாகத்திற்கும் பாதாள சாக்கடை இணைப்பைப் பெற விரும்பும் கட்டிட உரிமையாளர் / குடியிருப்பாளர், கீழே பட்டியலிடப்பட்டுள்ள உறையுடன் படிவம்–1 (இணைப்பு–1 இல் கிடைக்கும் பரிந்துரைக்கப்பட்ட வடிவம்) ஐ இணையதளம் மூலமாகவோ அல்லது நேரிலோ நகராட்சி ஆணையரிடம் விண்ணப்பிக்க வேண்டும். பட்டியலிடப்பட்ட உறைகள் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்ப படிவம்–1 செல்லாத விண்ணப்பமாகக் கருதப்படும்.

a) சொத்து வரி செலுத்துவதில் "பாக்கி இல்லை" என்பதற்கான சான்றாக இணைக்கப்பட வேண்டிய பாதாளசாக்கடை இணைப்பு கோரப்பட்ட கட்டிடத்திற்கான சொத்து வரி செலுத்தியதற்கான ரசீது.

b) இயந்திர துளைக்கு இடையில் வளாகத்திற்கு இடையே உள்ள குழாய் விவரங்களைக் குறிக்கும் ஒரு ஓவியம் / வரைபடம், உரிமம் பெற்ற பொறியாளரால் தயாரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட வேண்டும். மேலும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குழாய்களின் நீளத்திற்கு சாலை மறு சீரமைப்பு கட்டணங்களை அனுப்புவதற்கான ஆதாரம். சாலை மறு சீரமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள படி தீர்மானிக்கப்படும். ஆனால் அந்தப் பகுதியில் புதிய பாதாள சாக்கடை திட்டம் நடந்து வருவதால், குடியிருப்பாளர்கள் சாலை மறு சீரமைப்பு கட்டணங்களை செலுத்த வேண்டியதில்லை, ஏனெனில் அது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது மற்றும் நீர் இணைப்பு நகராட்சியால் வழங்கப்படும்.

c) எச்சரிக்கை வைப்புத் தொகையை அனுப்பியதற்கான ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்.

d) பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியைத் தவிர வேறு எந்தப்பகுதிக்கும் மேற்பார்வை கட்டணமாக ஒரு இணைப்புக்கு ரூ.1000/– செலுத்தியதற்கான அத்தாட்சி, இணைக்கப்பட வேண்டும்.

e) பல மாடிக்கட்டிட அடுக்குமாடி குடியிருப்புகள், குழு வீடுகளுக்கு நிலத்தடி கழிவு நீர் இணைப்பைப் பெற படிவம்–1 விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டால், குடியிருப்பாளர்களும் அனைத்து சொத்து கூட்டாக விண்ணப்பத்தில் உரிமையாளர்கள் / கையொப்பமிட வேண்டும். மேலும் உறுதி மொழிச்சான்றிதழில் கையொப்பமிட வேண்டும்.

f) பல மாடி கட்டிடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள், குழு வீடுகளுக்கான வீட்டு சேவை இணைப்பு படிவம் 1 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டும், அதனுடன் வளாகத்திற்கான விநியோகக்கோட்டிற்கும். பெறத்தகுதியான கழிவுநீர் இணைப்புகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான தூரம் மற்றும் பெறத்தகுதியான கழிவுநீர் இணைப்புகளின் எண்ணிக்கையையும் குறிக்கும் ஓவியம் / வரைபடத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி குழாய்களின் நீளம், இணைப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கான சாலை மறு சீரமைப்பு கட்டணங்களை அனுப்புவதற்கான ஆதாரம் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி கணக்கிடப்பட வேண்டும். புதிய பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்தும் பகுதிக்கு கட்டணங்களை செலுத்த விலக்கு சாலை மறு சீரமைப்பு அளிக்கப்படும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது பாதாள சாக்கடை திட்ட உப விதிகள் அமலுக்கு வந்த ஆண்டிற்கானது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 01 ஆம் நாள் முதல் கூடுதலாக 5% மதிப்பீட்டு கட்டணம் உயர்வு செய்யப்பட வேண்டும்.

| நீளம் மீட்டரில் | மணல் சாலை | தார் சாலை | சிமென்ட் தளம் கான்கிரீட் சாலை |
|---|---|---|---|
| 0–3 மீ | 3687/- | 3712/- | 3727/- |
| 0–6 மீ | 6760/- | 6811/- | 6841/- |
| 0–9மீ | 9834/- | 9911/- | 9956/- |
| 0–12மீ | 13103/- | 13204/- | 13265/- |
| 0–15 மீ | 16202/- | 16329/- | 16405/- |

g) பல மாடி கட்டிடங்கள், அடுக்கு மாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பைப் பெற அனுமதி கோரும் விண்ணப்பம் (படிவம் 1) அனைத்த வீடுகள் / சொத்துக்கள் / குத்தகைதாரர்கள் / அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு எந்த வித நிலுவைத் தொகையும் இல்லாமல் சொத்து செலுத்தியதற்கான ஆதாரத்துடன் இணைக்கப்பட வேண்டும். வரி

h) பல மாடி கட்டிடம். அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் குழு வீடுகளுக்கு வீட்டு சேவை இணைப்பைப் பெற அனுமதி கோரும் விண்ணப்பத்துடன் (படிவம் 11 வீடுகள் / சொத்துக்கள் / குத்தகைதாரர் / அடுக்குமாடி குடியிருப்புகளின் அனைத்து உரிமையாளர்கள் / குடியிருப்பாளர்கள் முன் வைப்புத் தொகை செலுத்தியதற்கான ரசீது இணைக்கப்பட வேண்டும்.

12. (1) வீட்டு சேவை இணைப்பைப் பெறுவதற்கு உரிமையாளர் / குத்தகைதாரர் பின் வரும் வைப்புத் தொகை மற்றும் பயனாளர் கட்டணங்களை பாதாள சாக்கடை அமைப்புக்கு செலுத்த வேண்டும்

அட்டவணை–1 : பாதாள சாக்கடை இணைப்புக்கான வைப்புத் தொகை

| கட்டிடத்தின் பரப்பளவு | பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை (ரூ./ இணைப்பில்) | | | |
|---|---|---|---|---|
| | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை | கல்வி / நிறுவனம் / அரசு அலுவலகங்கள் / மற்றவை |

| | | | | |
|---|---|---|---|---|
| நகராட்சி | | | | |
| < = 600 | 7500 | 15000 | 15000 | 15000 |
| 601 – 1200 | 10000 | 20000 | 20000 | 20000 |
| 1201 – 1800 | 12500 | 25000 | 25000 | 25000 |
| 1801 – 3500 | 15000 | 30000 | 30000 | 30000 |
| 3501 – 5000 | 20000 | 40000 | 40000 | 40000 |
| 5001 – 10000 | 25000 | 50000 | 50000 | 50000 |
| 10001 – க்குமேல் | 40000 | 80000 | 80000 | 80000 |
| சதுர அடி பரப்பளவு கொண்ட அடித்தளத்திற்கான அடிப்படை விகிதம் இது வாகும். 10001 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடத்தின் பரப்பளவு பகுதிக்கான வைப்புத் தொகை கட்டிடத்தின் பரப்பளவு அதிகரிப்பிற்கு ஏற்ப அதிகரிக்கப்படும். | | | | |

அட்டவணை–2:

பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான பயனர் கட்டணங்கள்

| கட்டிடத்தின் பரப்பளவு | பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான பயனர் கட்டணங்கள் (ரூ./இணைப்பில்) | | | |
|---|---|---|---|---|
| | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை | கல்வி / நிறுவனம் / அரசு அலுவலகங்கள் / மற்றவை |
| நகராட்சி | | | | |
| < = 600 | 120 | 360 | 360 | 360 |
| 601 – 1200 | 150 | 420 | 420 | 420 |
| 1201 – 1800 | 180 | 480 | 480 | 480 |
| 1801 – 3500 | 210 | 630 | 630 | 630 |
| 3501 – 5000 | 250 | 750 | 750 | 750 |
| 5001 – 10000 | 280 | 840 | 840 | 840 |
| 10001 – க்குமேல் | 300 | 900 | 900 | 900 |
| சதுர அடி பரப்பளவு கொண்ட அடித்தளத்திற்கான அடிப்படை விகிதம் இது வாகும். 10001 சதுர அடிக்கு மேல் உள்ள கட்டிடத்தின் பரப்பளவு பகுதிக்கான வைப்புத் தொகை கட்டிடத்தின் பரப்பளவு அதிகரிப்பிற்கு ஏற்ப அதிகரிக்கப்படும். | | | | |

(2) பாதாள சாக்கடை திட்டப்பணிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவை ஈடு கட்ட நிலத்தடி சேவை இணைப்பு வைப்புத் தொகை மற்றும் நீர் நுகர்வு கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் 3% வீதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும்.

(3) பாதாள சாக்கடை வீட்டு இணைப்பை ஏற்கனவே பெற்ற உரிமையாளர் / குடியிருப்பாளர், பாதாள சாக்கடை அமைப்பிற்கு செலுத்திய முந்தைய தொகையை காட்டிலும் தற்போதைய கூடுதல் வைப்புத் தொகை விகிதத்தின் அளவிற்கு செலுத்திடும் வகையில் வித்தியாச தொகையை செலுத்த வேண்டும்.

19(1). தனி நபர் வீடுகள் / குடியிருப்பாளர்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு இயந்திர குழியில் இருந்து வீட்டு வளாகத்திற்கு கொடுக்கப்படும் குழாய்கள் 100 மிமீ அளவுகள் கொண்டதாக அமையும்

(2). பலமாடி கட்டிடங்கள் / அடுக்குமாடி குடியிருப்புகள் / குழு வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதல்,

பலமாடி கட்டிடங்கள், அடுக்குமாடி குடியிருப்புகள். குழு வீடுகள் ஆகியவற்றில் உள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், கீழே உள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி. பலமாடி கட்டிடங்கள். அடுக்குமாடி குடியிருப்புகள், குழு வீடுகளுக்கான நிலத்தடி கழிவு நீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.

அட்டவணை

| வ. எண் | குடியிருப்புகள் | இணைப்புகளின் எண்ணிக்கை | வைப்பு | குழாயின் அளவு (இன்ட |
|---|---|---|---|---|
| 1 | 4 பிளாட்கள் வரை | 1 இணைப்பு | 20,000/- | 100 மிமீ விட்டம் கொண்ட குழாய் |
| 2 | 5 முதல் 8 பிளாட்கள் வரை | 2 இணைப்பு | 20,000/- ஒவ்பொரு இணைப்பிற்கும் | 150மிமீ விட்டம் கொண்ட குழாய் |
| 3 | 9 முதல் 12 வரையிலான பிளாட்கள் | 3 இணைப்பு | 20,000/- ஒவ்பொரு இணைப்பிற்கும் | 200மிமீ விட்டம் கொண் டகுழாய் |
| 4 | 12 பிளாட்டு களுக்கு மேல் | 1 இணைப்பு / 4 பிளாட்கள் | 20,000/- ஒவ்பொரு இணைப்பிற்கும் | நகராட்சி) பொறியாளரால் தீர்மானிக்கப்பட்டது. |

ஒவ்வொரு சொத்து வரி மதிப்பீட்டையும் மதிப்பிட்டு UGD பயனாளர் கட்டணங்களுக்கு ஒற்றை அலகாகக்கருத வேண்டும்.

(3) அடுக்குமாடி குடியிருப்புகள் அல்லது பலமாடி கட்டிடம் அல்லது குழு வீடுகளில் உள்ள குத்தகைதாரர்கள் / வீடுகளுக்கு நிலத்தடி இணைப்பு வழங்கப்படும். நிலையில் முன்வைப்புத் தொகை மற்றும் பயனாளர் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

20. மசூதி. கோயில்கள் மற்றும் தேவாலயங்கள் போன்ற வழிபாட்டுத் தலங்களில் பயனாளர் கட்டணங்கள் வீட்டு உபயோகமாகக் கருதப்படும் வழிபாட்டு நோக்கங்களைத் தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டால், அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படும்.

21. முந்தைய இரண்டு மாதங்களுக்கான நுகர்வுக்கு ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்கு முன் பாதாள சாக்கடை கட்டணங்கள் கோரப்படும்.

22. மேற் கூறிய காலத்திற்குள் தொகை செலுத்தப்படாவிட்டால், கோரிக்கை விடுக்கப்பட்ட பிறகு சேவையை துண்டிக்க நிர்வாக அதிகாரிக்கு சுதந்திரம் உண்டு. மேற்கூறிய காலத்திற்குள் தொகை செலுத்தப்படாவிட்டால், அத்தகைய துண்டிப்பிற்கான எந்த வொரு சேதத்திற்கும் நகராட்சி ஆணையர் பொறுப்பேற்கமாட்டார்

23. சொத்து வரி விதிக்கப்படாத வளாகத்திற்கு எந்த இணைப்பும் வழங்கப்படாது. ஏற்கனவே உள்ள வீட்டு நிலத்தடி இணைப்பு கட்டிடத்தில் இருந்தால், அது புனரமைக்கப்படும் அல்லது மாற்றியமைக்கப்படும் அல்லது பழுது பார்க்கும் நிலையில் வீட்டு உபயோகம் அல்லாத நோக்கத்திற்கான கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கேற்ப கட்டண விகிதம் வசூலிக்கப்படும்.

24. இந்த துணைச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அனைத்து பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான கட்டணத்தை சொத்து வரி வசூலிப்பதற்கான நடை முறை விதி முறைகளின் அடிப்படையில் வசூலிக்கப்படும்.

25. நகராட்சி பாதாளசாக்கடை இணைப்பு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும் நிலத்தடி கழிவுநீர் இணைப்பை நல்ல நிலையில் பராமரித்து, தனது சொந்த செலவில் பழுது பார்க்க வேண்டும்.

26. எந்த வொரு வீட்டு சேவை இணைப்பிலும் இணைக்கப்பட்ட குழாய் அல்லது பொருத்துதல்களை, அத்தகைய பொருத்துதல்களின் நிலைமைகளை ஆய்வு செய்வதற்காக அல்லது பழுது பார்ப்பதற்காக, நிர்வாக அதிகாரி எந்த நேரத்திலும் அகற்றலாம். அத்தகைய பரிசோதனையிலோ அல்லது வேறு விதமாகவோ, குழாய்கள் அல்லது பொருத்துதல்கள் ஏதேனும் குறைபாடுடையதாகக் கண்டறியப்பட்டால், நிர்வாக அதிகாரி வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அல்லது அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள், அத்தகைய குறைபாட்டை சரி செய்ய தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பை வழங்கலாம். அறிவிப்பில் அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் வேலை செய்யப்படாவிட்டால் அல்லது குறைபாடு நீர் மாசு பாட்டை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என கருதினால், நிர்வாக அதிகாரிதானே அத்தகைய பணியைச் செய்து, அதற்கான செலவை உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடமிருந்து மீட்டெடுக்கலாம் அல்லது மாற்றாக இணைப்பு துண்டிக்கப்படும்.

27. வீட்டு உபயோகத்திற்காக வழங்கப்படும் தரை வழி கழிவுநீர் இணைப்பு ஆணையின் முன் ஒப்புதல் இல்லாமல் வீடு அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தபடக்கூடாது ஆனால் வடிகால் இணைப்பு வீடு அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுவதாக ஆணையர் கண்டறிந்தாலோ அல்லது அவ்வாறு நம்புவதற்கு கரணங்கள் இருந்தாகோ, அறிவிப்பு தேதியிலிருந்து. உபவிதி 24 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட படி வீடு அல்லாத பயன்பாட்டிற்கான கட்டணங்களை வீட்டு இணைப்பு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் செலுத்த வேண்டும் என்று அவர்கள் கோரலாம் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால் வீட்டு இணைப்பை துண்டிக்க ஆணையர் உத்தரவிடலாம்.

28. இந்த உப விதி அமலுக்கு வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட அனைத்து வீட்டு சேவை இணைப்புகளும் இந்த உப விதியின் கீழ் வழங்கப்பட்டதைப் போலவே செல்லுபடியாகும் என்றும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்த உப விதியின் கீழ் பொருந்தக்கூடிய விகிதத்தை செலுத்தினால், இந்த உப விதிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பாக அங்கீகரிக்கப்படும். இந்த உப விதிகளின் கீழ் மேற்கூறிய கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டால், அத்தகைய இணைப்புகள்

வீட்டு உபயோகம் அல்லாத சட்ட விரோத இணைப்புகளாகக் கருதப்பட்டு, வீட்டு உபயோகத்திற்கு ரூ.3000/- மற்றும் வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புகளுக்கு ரூ.6000/- என்ற விகிதத்தில் அபராதம் விதிக்கப்படும். இந்த இணைப்புகள் அபராதத்துடன் துண்டிக்கப்பட வேண்டும். தொடர்ச்சியான குற்றத்தில் ஈடுபடும் வீட்டு உபயோக இணைப்பு நிரந்தரமாகதுண்டிக்கப்படும்.

29. (1) அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால் பாதாள சாக்கடை பயனாளர் கட்டணங்கள் வீட்டுக்கட்டணங்களாக வசூலிக்கப்படும்.

(2) அரசு அலுவலக கட்டிடங்கள் மற்றும் பொதுத்துறை அலகுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகளை வழங்கும் போது. வீடு அல்லாத இணைப்புகள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

30. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (1999 ஆம் ஆண்டு சட்டம்) பிரிவு 199(2) இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் படி, துணைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளில் அபராதம் விதிக்கவும், விதி மீறல்களை முறைப்படுத்துவதற்க்கும் தேவையான நடைமுறைகளை நகராட்சி மன்றம் உத்தரவிடலாம்.

## Under Ground Sewerage By Law

In exercise of the powers conferred under sub-section (1) of section 199 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act of 1999) the council of DHARMAPURI Municipal Council, hereby makes the following By-Laws with the approval of the Director for regulation of Under Ground Drainage Connection.

1. (1) For getting Under Ground drainage connections, the owner of the building or the tenant of the building with the approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/-, details indicated in Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc.,

   (2) The Engineer or his/her authorized officer shall scrutinize the application and advise the owner/tenant to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more installments as ordered by the Commissioner based on the Council resolution along with charges towards inspection, road restoration and centage.

   (3) The commissioner shall thereafter issue order in Form 2 to provide house service connection.

   (4) The connections shall be given through the Municipal/ Trained Plumbers / Contractor engaged by the owner/tenant, under supervision by Municipal/ authorities in the order of priority prepared based on the date of registration of application.

2 (1) For getting Under Ground drainage connections, in the new Under Ground drainage system provided or being provided as part of any comprehensive Under Ground drainage improvement scheme, the owner of the building or the tenant of the building with the

approval of the owner shall apply to the Commissioner in "Form 1" in the Annexure along with the application fees of Rs.100/-, details indicated in the Form 1 and details of property such as copy of sale deed, property tax remittance etc.,.

(2)The commissioner shall thereafter issue order in Form 2 to provide house service connection.

(3)The connections shall be given through the civil works Contractor engaged by the Municipal / Parastatal Agency namely Tamil Nadu Water Supply And Drainage Board under the Under Ground drainage improvement scheme. The Contractor, upon advice by the Municipal Engineer, shall provide UGS service connections under the contract for the Under Ground drainage improvement project.

(4)The Municipal Engineer shall parallelly advise the applicants to remit the deposit depending upon the plinth area as specified in Table-1 either in one or more installments as ordered by the Commissioner. The Parastatal Agency/City Engineer shall ensure that all the assessed properties (both domestic and non-domestic) are provided with Under Ground drainage service connections without any omissions.

3.The application received along with the requisite documents will only be considered for providing Under Ground drainage connection

4.The Municipality shall levy the UGS charges based on the plinth area of the building as per the rates specified in Table-2 for both domestic and non-domestic connections. The user charges shall be levied on a flat rate basis

(1) Where the Underground Drainage Sewerage System is facilitated in the Municipality the households / buildings and other utilities shall avail the Under Ground Sewerage System service connection with required internal plumbing to connect the same to the machine hole / collection system after obtaining the permission from the Municipality.

(2)The area not facilitated with the Underground System in the Municipality the households, buildings shall have impermeable septic tank to collect and store the human excreta and the sewage generated by the users and to dispose the same on timely basis through the Municipality licensed Sullage lorry operators. With the permission of Commissioner of Municipality, the licensed sullage operators shall dispose the collected sewage from the individual households, septic tanks to the designated and authorised STP/FSTP.

5(1) Rain water harvesting structure shall be established within the premises by the owners of households / buildings to improve the ground water level and to maintain the water table and to prevent the entry of rain water into the Under Ground drainage sewerage system. The rain water harvesting structure shall be constructed with the advice of engineers of the Municipality. The provision of rain water harvesting structure in the premises of households / building shall be ensured before permitting the house service sewerage connection.

(2) Rain water harvesting structures shall be constructed in such way to prevent to the entry of collected rain water into the inspection chamber of the sewerage system. This above structure shall be constructed using the materials and procedures recommended by the Engineers of Municipality.

6. The internal Plumbing infrastructures shall be constructed in such a way to collect black water and gray water such as the water from the bathroom and kitchen and to let off the waste water collected into the underground sewerage system established by the Municipality. The drainage structure will be constructed according to specification provided in the Tamil Nadu Combined Building Rules 2019.

7. The Under Ground sewer line shall be within the premises of households with proper internal plumbing and related infrastructure including Air vent pipe, before connecting the sewer line to the collection system instructed by the Municipality. In every House service connection Gully trap is to be provided and in workshop, Bakery and Hospitals Greece trap and oil trap must be provide.

8. The inspection chamber and bell trap / bit trap shall be covered with a top cover as per the recommendation of Municipal Engineers.

9. The House Service Connection, collection pipe should be connected with the collection system of the Under Ground Infrastructure of the Municipality with appropriate gradient and bends so as to carry the domestic sewage to the system / machine hole without any blockage. Specifically the inter connection should not be made perpendicularly horizontally with the Municipality Sewerage System.

10. The Residents/occupier/owner in the apartments and bulk sewage waste water generator should be established a small scale sewage treatment plant within their premises and connected with the nearest machine hole in the underground sewage system.

11. If the underground sewage collection system required to construct by crossing a wall structure or underneath of a wall, then the collection system shall be constructed with proper bend and using Reinforced Cement Concrete as recommended by the Municipal Engineers, in such a way to ensure the protection of sewage carrying pipe without damage the underground drainage pipe due to construction of wall over the sewage pipe.

12. The sewage carrying / collection shall be laid within the premises up to the compound wall of the property so as to connect the same to Municipality underground swage system by maintaining minimum distance between both connecting points.

13. When the existing households not having any toilet the house owner held responsible to construct the toilets and to be connected in the underground drainage system to avoid open defecation.

14.When a shopping complex have no separate urinal and toilet room, the common toilet to be constructed and connected with the nearest machine hole in the underground drainage system.

15 A Trap, grating shall be fixed in the sewerage line as per the recommendation of Engineers of Municipality.

16. Owners or occupant of building / premises shall facilitate the Municipal Engineers for inspection at any time.

17 The building owner / occupant who desires to get underground drainage Connection for any premises shall apply to Commissioner of the Municipality either through online or in person by submitting the Form–1 (prescribed format available in annexure–1) along with the below listed enclosure. The application Form–1 received without the listed enclosures shall be considered as invalid application.

a) The receipt for remittance of property tax for the building for which Under Ground Drainage Connection requested to be enclosed as proof for "No due" on property tax Service remittance.

b) A sketch/drawing indicating the plumbing details between the machine hole to the premises, prepared and certified by the licensed engineer should be enclosed. Further the proof for the remittance of road restoration charges for the length of plumbing indicating in the drawing. The road restoration shall be determined as indicated below. But in the new Under Ground Drainage Scheme is ongoing in that area, the residents need not remit the road restoration charges since it is included in the scheme and the water connection will be given by the Municipality.

c) The proof for the remittance of caution deposit should be enclosed.

d) The proof for the remittance of Rs. 1000/– per connection as supervision charges should be enclosed except the underground sewage scheme implementing area.

e) An undertaking certificate shall be signed. If the Form –1 application is submitted to avail Underground Sewage connection for multi storied building apartments, group houses all the property owners/residents should sign in the application.

f) House service connection for Multi–storied building, apartments, group houses should be submitted in Form 1 with the sketch/drawing indicating the distance between the distribution line to the premises and the number of sewage connections eligible to avail. The proof for the remittance of road restoration charges for the length of plumbing, number of connections as indicated in the drawing should be calculated as per the table enclosed. New ongoing Underground Sewage scheme project implementing area shall be exempted to remit the road restoration charges.

The amount mentioned below is for the year in which this By-Law came into force. Therefore an additional 5% per annum shall be payable to the assessing Municipality.

| length | Earthen Road | Bitumen road | Cement concrete Road |
|---|---|---|---|
| 0-3 m | Rs. 2798/- | Rs. 3052/- | Rs. 3205/- |
| 0-6 m | Rs. 5594/- | Rs. 6102/- | Rs. 6407/- |
| 0-9 m | Rs. 8390/- | Rs. 9153/- | Rs. 9610/- |
| 0-12 m | Rs. 11186/- | Rs. 12203/- | Rs. 12813/- |
| 0-15 m | Rs. 13984/- | Rs. 15254/- | Rs. 16016/- |

g) The application (Form 1) Seeking Permission to avail Under Ground Drainage connection for Multi-storied Building, apartments and group houses shall be enclosed with the proof for remittance of property tax without any due for all the households/properties/tenants/flats.

h) The application (Form 1) seeking permission to avail house service connection for Multi storied building, apartments and group houses should be enclosed with the proof for remittance of caution deposit by all the owners/residents of the households / properties / Tenant / Flats

18. (1) The following deposit and user charges for Under Ground Drainage shall be payable by the Owner/ Tenant for obtaining House Service Connection.

**Table-1: Deposit for Under Ground Drainage Connection**

| Plinth Area of Assessment in Sq.ft | Under Ground Drainage Service Connection Deposit (in Rs./connection) | | | |
|---|---|---|---|---|
| | Residential | Commercial | Industrial | Educational /Institution/ Government Offices/Others |
| **Municipal Council** | | | | |
| <=600 | 5000 | 10000 | 10000 | 10000 |
| 601-1200 | 7500 | 15000 | 15000 | 15000 |
| 1201-1800 | 10000 | 20000 | 20000 | 20000 |
| 1801-3500 | 12500 | 25000 | 25000 | 25000 |
| 3501-5000 | 15000 | 30000 | 30000 | 30000 |
| 5001-10000 | 20000 | 40000 | 40000 | 40000 |
| Above 10001 | 30000 | 60000 | 60000 | 60000 |

| |
|---|
| * This is the base rate for the plinth area of 10001 sq.ft. The deposit for the plinth area above 10001 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. |

Table-2:User Charges for Under Ground Drainage Connections

| Plinth Area of Assessment in Sq.ft | User Charges for Under Ground Drainage Connections (in Rs./connection) | | | |
|---|---|---|---|---|
| | Residential | Commercial | Industrial | Educational /Institution/ Government Offices/Others |
| Municipal Council | | | | |
| <=600 | 100 | 300 | 300 | 300 |
| 601-1200 | 120 | 360 | 360 | 360 |
| 1201-1800 | 150 | 450 | 450 | 450 |
| 1801-3500 | 180 | 540 | 540 | 540 |
| 3501-5000 | 210 | 630 | 630 | 630 |
| 5001-10000 | 240 | 720 | 720 | 720 |
| Above 10001 | 270 | 810 | 810 | 810 |
| * This is the base rate for the plinth area of 10001 sq.ft. The water consumption charge for the plinth area above 10001 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | |

(2)The Under Ground service connection deposit and water consumption charges shall be increased at the rate of 3 % on every year so as cover the cost of operation and maintenance of the entire water supply system.

(3) The owner / occupant, who have already availed the House Service Connection, shall also be required to be pay the remaining amount of deposit for Under Ground drainage to the extent of the present rate of such deposit.

19 (1).Providing UGS for Individual Households / Residents, if the length of the UGS connection given from manhole to house hold premises, then 100 mm pipes is used.

(2).Providing UGS for Multi- storied building/Apartments/Group Houses,

the Under Ground Sewerage Connection for multistoried building, apartments, group houses shall be provided as indicated in the below table irrespective of the total number of house hold in the multistoried buildings, apartments and group houses.

Table

| Sl.No | Apartments | No.of Connection | Deposit | Size of Pipe (in. dia) |
|---|---|---|---|---|
| 1 | Upto 4 Flats | 1 connection | Rs.20,000/- | 100mm dia pipe |
| 2 | From 5 to 8 Flats | 2 connection | Rs.20,000/- Each Connection | 150mm dia pipe |
| 3 | From 9to12 Flats | 3 connection | Rs.20,000/- Each Connection | 200mm dia Pipe |
| 4 | above 12 Flats | 1 connection / 4 Flats | Rs.20,000/- Each Connection | 200mm dia Pipe |

Provided that <u>every Property tax assessment should be treated as single unit for assessment UGD user charges</u>

(3). The tenants / households in the apartments or multi-storied building or group houses shall be provided underground connection and the caution deposit and user charges shall be collected from all the tenants / occupant / residents.

20. The user charges for the purpose on worship places like mosque, temples and churches will be treated as Domestic purpose. If any one of their property used other than worship purposes is to be taken on commercial and charge will be levied accordingly.

21. Demand for UGS charges will be made before $10^{th}$ of every month for the consumption for the previous two months.

22. If the amount is not paid in the above period, the Executive authority shall be at liberty to cut off the service after the demand is made. If the amount is not paid within the above, the Commissioner shall not be liable for any damages for such disconnection.

23. No connection will be provided to the premise to which is not levied property tax. If an existing domestic under ground connection is in the building which the same will be reconstructed or modified or major repairs connection will be taken into account as on non-domestic purpose and the rate of charges will be collected accordingly.

24. Payment for all Under Ground sewage connection under the terms and conditions laid down in these by laws is not made by the party concerned within the time stipulated, shall be recoverable in the same manner as within the norms for property tax collection.

25. Every person to whom Under Ground Sewage connection is or has been provided by the Municipality shall maintain the Under Ground Sewage connection in good condition and repairs at his own cost.

26. The Executive Authority may at any time remove any pipe or fittings connected with any house service connection for the purpose of examining the conditions of or repairing of such fittings. If on such examination or otherwise, it is found that the pipes or fittings are defective in any respect, the Executive Authority may give notice to the owner or occupier of the premises to execute within a specified time period or one month at the most, if the work necessary to remedy such defect may be carried out. If the work is not executed within the time allowed in the notice or if the defect is likely to cause contamination of water, the Executive Authority may himself / herself execute such work and recover the cost from the owner or occupier or alternatively the connection will be disconnected.

27. Under Ground Sewage connection provided for domestic purpose and the same shall not be used for non-domestic purpose without prior approval from Commissioner. But, if the Commissioner finds that the drainage connection is being used for non-domestic purpose or has reasons to believe so, they may require the house connection owner or the resident to pay charges for non-domestic use as determined under By-Law 24, from the date of notice. If the charges so determined are not paid, the Commissioner may order the disconnection of the house connection.

28. All house service connections granted before date of commencement of these by-law come into force shall be recognised as valid as if they had been granted under these by-law and shall be recognized as authorized connection under the provisions of these bye-law, if

the owner or occupier remits the rate applicable under these bye–laws. If the said charges are not paid under these by–laws and such connections are to be treated as for non domestic illegal connections and fine will be imposed at the rate of Rs.3000/– for domestic and Rs.6000/– for non domestic. These connections are to be disconnected with fine. In continuous offence, the House Service Connection will be disconnected permanently.

29. (1) Under Ground drainage used for Government Educational Institutions and Government Hospitals are exempted from payment of property tax and the User charges will be collected as Domestic charges.

(2) While giving Under Ground Drainage connections to Government Office Buildings and Public Sector Units in the assessment shall be ensured for providing non–domestic connections.

30. The Municipal Council may provide penalties in the by–laws and regulations, and for violation of such by–laws and regulations in accordance with the rules framed under section 199(2) of Tamil Nadu Urban Local Bodies act 1998 (act of 1999).

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் : 35**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 25 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வாகனங்கள் முதற்கட்டமாக 10 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 2018 ஆம் வருடமும், இரண்டாம் கட்டமாக 08 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் 2019 ஆம் வருடமும், 07 பேட்டரி இயங்கும் வாகனங்கள் 2023ஆம் வருடமும் வாங்கப்பட்டது. அனைத்திலும் Lithion–Ion பேட்டரி பொருத்தப்பட்டுள்ளது. பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் பொழுது வாகனம் அடிக்கடி பழுதாகி திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிக்கப்படுகிறது. இந்த வாகனத்தில் பேட்டரிகள், டயர்கள், மோட்டர், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள் ஆகியவை தொடர்ந்து பழுதாகி வருகிறது. எனவே 25 பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் உள்ள பழுதுகளை நீக்க ஆகும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணியின் அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார பணி நலன் கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 2023 பிரிவு 57ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு பேட்டரி வாகனங்கள் பழுது சரி செய்யும் நிறுவனம் Thiraviyam Infotech, மதுரை அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு வருவாய் நிதியின் கீழ் ரூ.19,99,804/–ஐ வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 36

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.9730/2025/எஸ்எஸ்1 நாள்.30.05.2025ல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்– III 2025–2026ன் கீழ் தருமபுரி நகராட்சிக்கு ரூ.231.60 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை மேற்கொள்ளப்பட்ட சாலைகள் புணரமைப்பு பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பெயரில் ரூ.55.00 இலட்சம் மதிப்பீட்டில் PACKAGE–2 க்கான பணிகள் மேற்கொள்ள Online மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 27.06.2025 அன்று வரப்பொற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு முன் விலை விகிதம் | ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்புக்கு பின் விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 7.00% மதிப்பீட்டை விட அதிகம் | 4.99% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | DSA CONSTRUCTION | 15.00% மதிப்பீட்டை விட அதிகம் | – |

அலுவலக குறிப்பு :

1). வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திரு.டி.எஸ்.ஜப்பார் ஒப்பந்ததாரர் அவர்களின் 4.99% மதிப்பீட்டைவிட அதிகமாக வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணியின் அசவர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 37

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 2025–2026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. நகராட்சி பகுதிகளில் நகராட்சி சார்பாக அனைத்து முகாம்கள் நடந்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி நகராட்சி சார்பில் ஜீலை 2025 முதல் அக்டோபர்–25 வரை நடைபெறவுள்ளது. முகாமிற்கு வரும் பொதுமக்களுக்க அடிப்படை வசதிகள் பெரிய அளவிலான சாமியான பந்தல் அமைத்தல் அலுவலர்கள், பயனாளிகள் கொண்டு இருக்கை வசதிகள் ஏற்பாடு செய்தல், தரை விரிப்புகள் மற்றும் மைக்செட் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இப்பணினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 38**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள புற நகர் பேருந்து நிலையம் எடைபார்க்கும் இயந்திரம் வடபுறம் ஆண்டு குத்தகைக்குவிட 17.06.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அன்றைய தினம் கீழ் கண்டவாறு இரண்டு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பெற்றுள்ளது.

| குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| புற நகர் பேருந்து நிலையம் எடை பார்க்கும் இயந்திரம் (வடபுறம்) | திரு.ஜி.வேடியப்பன் த/பெ கோபால் | ரூ17000/- |
| | திரு.எ.இளையபல்லவன் த/பெ அண்ணாமலை | ரூ.14500/- |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஜி.வேடியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு குத்தகை தொகைமற்றும் மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையைவிட கூடுதலாக உள்ளது. எனவே திரு.ஜி.வேடியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுதி எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்ச்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக 1.07.2025 முதல் குத்தகைதார்ருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 39**

தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதால் நகராட்சி பகுதிகளில் உள்ள முக்கிய கால்வாய்களான பழைய இரயில்வே லைன், பென்னாகரம் ரோடு, சேலம் மெயின் ரோடு, எஸ்.வி.ரோடு. ASTC காலனி குடியிருப்பு மற்றும் இதர பிரதான மற்றும் பெரிய கால்வாய்களில் இருந்து கழிவுநீர் வெளியேறும் கால்வாய்களை தூய்மை பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்ய இயலாது. எனவே, மேற்கண்ட பகுதிகளில் உள்ள கால்வாய்களை சுத்தம் செய்ய வேண்டியிருப்பதால் மாற்று ஏற்பாடாக மினி ஹிட்டாச்சி இயந்திரத்தினை பயன்படுத்தி பணியினை செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, வடகிழக்கு பருவமழையின் போது பொதுமக்கள் பாதிப்படையாமல் மழை நீர் கால்வாய்களில் தங்கதடையின்றி செல்ல மினி ஹிட்டாச்சி வாகனம் பயன்படுத்த வேண்டியுள்ளதால் அதற்காக ஏற்படும் செலவினத் தொகை ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 40

தருமபுரி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் திறந்தவெளிக் கழிப்பிடமில்லாத நிலை (ODF++), GFC நிலை, தூய்மை நகரமாக்கும் (Swachh Survekshan) தரச்சான்றிதழ்கள் பெறும் நோக்கத்தில், நகராட்சியில் உள்ள பொதுக்கழிப்பிடங்களை மேம்படுத்த மற்றும் நிர்வகிக்க தேவையான பொருட்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள்-2023 பிரிவு – 57ன் கீழ் கொள்முதல் செய்யப்பட்டதையும் அதற்கான செலவின தொகை ரூ.9.35 லட்சம் வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செயலாம்.

பொருள் : 41

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம். வார்டு-ஏ, பிளாக்-17, நகரளவு எண்.3/4A,19-ல், 0.84 ஏக்கர் (0.34.23 ஹெக்டேர்) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் திரு.கருபண்ணன் த/பெ ஸ்ரீரங்ககவுண்டர் என்பவர் அமைக்கப்பட உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். UBMC5881/2024/TCP நாள்.28.11.2024-ன் படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண் SWP/DTCP/DHARMAPURI / LAYOUT APPROVAL NO. 151/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு மனுதாரர் தானபத்திரம் ஆவணம் எண்.2937/2024, நாள்.27.11.2024-ன் படி பதிவு செய்து நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அசல் தானபத்திர நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவில் புதியதாக தார்சாலை. மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் பகிர்மான குழாய் நல்ல முறையில் அமைப்பட்டுள்ளதாக, நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் 28.07.2025-ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதியும். மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்கான உரிய கட்டணங்கள் அனைத்தும் நகராட்சிக்கு செலுத்திய பின்னர் மனைப்பிரிவிற்கு நகராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் மனைப்பிரிவினை அங்கீகரிக்கலாம்.

பொருள் : 42

18.06.2025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் தலைமையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு ஆய்வு கூட்டம் நடைபெற்றது. ஆய்வு கூட்டத்தில் மதிப்பிற்குரிய பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களும் தருமபுரி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் உரிய கவனம் செலுத்தி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் வழிகாட்டுதலின் படி பணி மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். மேலும் நுண் உர மையங்களில் வெளியே கொட்டி வைக்கப்பட்டுள்ள அரைத்த மக்கிய உரமக்கிய கழிவுகளை உடன் அப்புறப்படுத்தி நுண் உர மையத்தின் பகுதிகளை தூய்மையாக பராமரிக்க ஆலோசனை தெரிவித்தனர். மதிகோண்பாளையம் நுண் உர மையம் பச்சையம்மன் கோவில் நுண் உர மையம், மற்றும் சந்தைப்பேட்டை நுண் உர மையங்களில் தினசரி பெறப்படும் மக்கும் கழிவுகள் அரைத்து உரமாக மாற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு மக்கும் கழிவுகள் அரைத்து மக்கிய பிறகு விவசாயிகளுக்கு வழங்கிய பணி நடைபெற்றும் போதுமான வரவேற்பு இல்லாத காரணத்தால் உரமானது தேக்கி வைக்கப்படுகிறது. கீழ்கண்ட MCC மையங்கள் – மதிகோண்பாளையம் நுண் உர மையத்தில் 1600MT, சந்தைப்பேட்டையில் 800MT மற்றும் பச்சையம்மன் கோவில் நுண் உரமையத்தில் 800MT அளவு மக்கிய கழிவு உரங்கள் நுண் உரமையத்தின் வெளியே சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு குழு மற்றும் கண்காணிப்பு குழு ஆய்வுக்கூட்டத்தில் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மதிப்பிற்குரிய பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைப்படி நுண் உரமையங்களில் உள்ள மக்கிய கழிவு உரங்களை உடன் அப்புறப்படுத்தி தடங்கம் உரத்திடலில் சேமித்து வைக்கவும், தினசரி தயார் செய்யப்படும் உரம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கியதன் படியும், பச்சையம்மன் கோவில் நுண் உர மையம், மற்றும் சந்தைப் பேட்டை நுண் உரமையங்களில் உள்ள மக்கிய உரத்தினை தடங்கம் உரக்கிடங்கிற்கு தனியார் வாடகை டிப்பர் லாரிகள் மற்றும் JCB வாகனங்கள் பயன்படுத்தி போர்க்கால அடிப்படையில் பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் இப்பணியினை அகற்றிட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் – 2023 பிரிவு 57–ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் மூலம் பணியினை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொண்டதையும் தொகை வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் : 43

தருமபுரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வெள்ளேகவுண்டன்பாளையம் கிராமம். வார்டு-ஏ, பிளாக்-17, நகரளவு எண்.5/1-ல் 1.275 ஏக்கர் (0.51.64 ஹெக்டேர்) பரப்பளவு கொண்ட மனையிடத்தில் திரு/திருமதி. அஞ்சலி, தங்கம் மற்றும் அரவிந்த் என்பவர்கள் அமைக்கப்பட உள்ள புதிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 9OZ7Z46X/2025/TCP நாள்.03.02.2025-ல் மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்டஅனுமதி எண் SWP/DTCP/DHARMAPURI/LAYOUT APPROVAL NO. 07/2024 என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சிக்கு மனுதாரர் தானபத்திரம் ஆவணம் எண்.137/2025, நாள்.24.01.2025-ன் படி பதிவு செய்து நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அசல் தானப்பத்திர நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவில் புதியதாக தார்சாலை. மழைநீர் வடிகால், தெருவிளக்கு, குடிநீர் பகீர்மான குழாய் நல்ல முறையில் அமைப்பட்டுள்ளதாக, நகராட்சி பொறியியல் பிரிவின் மூலம் 28.07.2025-ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதியும். மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்கான உரிய கட்டணங்கள் அனைத்தும் நகராட்சிக்கு செலுத்திய பின்னர் மனைப்பிரிவிற்கு நகராட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் மனைப்பிரிவினை அங்கீகரிக்கலாம்.

பொருள் : 44

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 2025-2026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. நகராட்சி பகுதிகளில் நகராட்சி சார்பாக அனைத்து முகாம்கள் நடந்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி நகராட்சி சார்பில் ஜீலை 2025 முதல் அக்டோபர்-25 வரை முகாம்கல் நடைபெறவுள்ளது. முகாமிற்கு வரும் பொதுமக்களுக்க குடிநீர் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இப்பணினை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனும்திக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 45

அரசு ஆணை(நிலை) எண்.77 பள்ளி கல்வித்துறை நாள் 13.04.2015ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பள்ளி கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை மகளிர் சுய உதவி குழு அல்லது தனியார் சேவை வழங்கும் நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தொகையின் கல்வி நிதியின் கீழ் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட டவுன் உயர்நிலைப்பள்ளி அரசு கிருபானந்தவாரியார் பள்ளி, அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளிகளில் உள்ள கழிவறைகள் தூய்மை பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் தருமபுரி அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 10607/2024/இ1 நாள்.08.07.2024ல் தெரிவித்துள்ள தினக்கூலி தூய்மை பணியாளர்களுக்கு ரூ.410/ என நிர்ணயம் செய்யப்பட்டதின் பெயரில் மூன்றாண்டுக்கு மேற்கண்ட பள்ளி கழிவறையினை தூய்மை பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் தருமபுரி அதியமான் மகளிர் முன்னேற்ற சங்கத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை தொடர்ந்து 09.09.2024ல் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் தினக்கூலி பணியாளர்களுக்கு 01.042025 முதல் ஊதியம் நிர்ணையம் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து. மேற்கண்ட பணியினை மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்கு தினக்கூலியினை கீழ்கண்டவாறு மறு நிர்ணையம் செய்து 01.04.2025 மாதத்திற்கு கூடுதல் நிலுவை தொகை வழங்கவும் மற்றும் 01.05.2025 முதல் 31.08.2025 வரை ரூ.410ல் இருந்து ரூ.541/ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பழைய தினக் கூலி ஊதியம் ரூ. | புதிய தினக் கூலி ஊதியம் ரூ. | வித்தியாச தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 410.00 | 541.00 | 131.00 |

அலுவலக குறிப்பு :

1) தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூமு.12061/2025/ஐ1 நாள்.03.07.2025ல் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி தொகைனை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட கூடுதல் செலவினத்தை கல்வி நிதியின் கீழ் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 46**

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள புற நகர் பேருந்து நிலையம் எடைபார்க்கும் இயந்திரம் தென்புறம் ஆண்டு குத்தகைக்குவிட 17.06.2025 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அன்றைய தினம் கீழ் கண்டவாறு இரண்டு எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பெற்றுள்ளது.

| குத்தகை இனம் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நபர்களின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| புற நகர் பேருந்து நிலையம் எடை பார்க்கும் இயந்திரம் (தென்புறம்) | திரு.ஜி.வேடியப்பன் த/பெ கோபால் | ரூ12000/- |
| | திரு.எ.இளையபல்லவன் த/பெ அண்ணாமலை | ரூ.9750/- |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.ஜி.வேடியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி சென்ற ஆண்டு குத்தகை தொகைமற்றும் மூன்றாண்டு சராசரி குத்தகை தொகையைவிட கூடுதலாக உள்ளது.எனவே திரு.ஜி.வேடியப்பன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றதின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுதி எதிர்நோக்கி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்ச்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஏதுவாக 1.07.2025 முதல் குத்தகைதார்ருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 47**

தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தினசரி 28MT அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இதில் 12MT அளவு மக்காத கழிவுகள் மறுசுழற்சிக்கு ஆகாத கழிவுகளை மக்காத கழிவுகளில் இருந்து தனியே பிரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு மாற்று எரிபொருளாக அனுப்பவும், மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பவும், 3 வள மீட்பு மையங்கள் தருமபுரி நகராட்சியில் செயல்பட்டு வருகிறது. இதில் சந்தைப்பேட்டை நுண்உர மையத்தில் உள்ள வளமீட்பு மையத்தில் "வைப்ரேட்டருடன் கூடிய கன்வேயர் பெல்ட்" அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மக்காத கழிவுகளை மறுசுழற்சி மையங்களுக்கு அனுப்பும் வகையிலும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பும் வகையிலும், பிரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகளில் கூறப்பட்டுள்ளபடி பணி மேற்கொள்ளவும்சந்தைபேட்டை நுண் உர மையத்தில் உள்ள 1TPD வளமீட்பு மையத்தின் தரைப்பகுதி சேதமடைந்துள்ளதை சரி செய்து கன்வேயர் பெல்ட் 50 அடி நீளத்தில் அமைக்கும் பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 48

கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்)2024.

கசடுகழிவு மேலாண்மை துணை விதிகள்,

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இன் அத்தியாயம் X–A, பிரிவு 199, அத்தியாயம் XI ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, தருமபுரி நகராட்சி மன்ற அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள கழிப்பறைகள் மற்றும் நச்சு தொட்டிகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பை ஒழுங்குபடுத்துவதற்காக பின்வரும் துணை விதிகளை உருவாக்குகிறது.

இந்த துணை விதிகள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் அத்தியாயம் XI– பகுதி IV ", 2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்", அவ்வப்போது அரசாங்கத்தால் அறிவிக்கப்படும் பிற தொடர்புடைய விதிகள் மற்றும் உத்தரவுகளுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்.

**1. சுருக்கமான தலைப்பு, தொடக்கம் மற்றும் பொருந்தக்கூடிய தன்மை**

i. இந்த துணை விதிகள் தருமபுரி நகராட்சிக்கான கசடுகழிவு மேலாண்மை துணைவிதிகள் என்று அழைக்கப்படும்.

ii. இந்த துணை விதிகள் தருமபுரி மாவட்டத்தின் அரசிதழில் அறிவிக்கப்பட்டு வெளியிடப்பட்டஅல்லது குறிப்பாக அறிவிக்கப்படும் பிற தேதியில் நடைமுறைக்கு வரும்.

iii. இந்த துணை விதிகள் அமலுக்கு வந்ததும், குடியிருப்பு, வணிக நிறுவன நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும், தருமபுரி நகராட்சியின் அதிகார வரம்பில் அமைந்துள்ள குளியலறைகள், கழுவும் பகுதிகள், கழிப்பறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கொண்ட அனைத்து கட்டிடங்களுக்கும் பொருந்தும்.

**2. வரையறைகள்**

இந்த உப விதிகள் பத்தியிலுள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிக்கிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன:

1. "மேல்முறையீட்டு அமைப்பு" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும், நகர சுகாதாரக் குழு அல்லது வேறு ஏதேனும் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பைக் குறிக்கும், மேலும் இந்த அமைப்பானது துணை விதிகள் தொடர்பான எந்தவொரு தகராறு, மேல்முறையீடு அல்லது சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொறுப்பாகும்.
2. "அதிகாரம்" என்பதுஅவ்வப்போது இந்த துணை விதிகளை செயல்படுத்துவதற்காக அறிவிக்கும் மாநகராட்சி/நகராட்சியை குறிக்கும்.
3. "இணை சுத்திகரிப்பு" என்பது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP), கழிவுநீர் குழாய்கள் வழியாக கொண்டு செல்லப்படும் வீட்டு கழிவுநீரை சுத்திகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு இடத்திலுள்ள சுகாதார அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கசடு மற்றும் கழிவுநீரையும் சுத்திகரிக்கும் செயல்முறையைக் குறிக்கும்.
4. "கழிவுநீர் வெளியேற்றும் கட்டணம்" என்பது கழிவுநீரை அகற்றும் வசதிக்கு ஒவ்வொரு முறையும் கழிவுநீர் அகற்றும் வாகனம் வருகை தரும்போது,

சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள மாநகராட்சி/நகராட்சிக்கு கழிவுநீர் அகற்றும் வாகனம் இயக்குபவர் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.

5. "கழிவு நீக்கம்" என்பது நிகழ்விட சுகாதார அமைப்புகளிலிருந்து கசடு மற்றும் கழிவுநீரை அகற்ற உரிமம் பெற்று இயக்குபவர்களின் செயல்பாட்டைக் குறிக்கிறது.

6. "அகற்றுதல்" என்பது அவ்வப்போது அறிவிக்கப்படும் குறிப்பிட்ட இடங்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை கொண்டு சென்று வெளியேற்றுவதைக் குறிக்கும்.

7. "கசடுகழிவு " என்பது செரிமானமாகாத அல்லது பகுதியளவு செரிமானமான, அரைநீர்ம அல்லது அரை திண்மமாகவோ, கழிவுகள் மற்றும் கழிவறை கழிவுநீர் (black water), இதர கழிவு நீருடன் (grey water)" அல்லது இல்லாமல் சேகரித்தல், சேமித்தல் அல்லது சுத்திகரிப்பு செய்வதைக் குறிக்கும். இது குழி கழிப்பறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகளின் திடமான அல்லது தேங்கிய கழிவுகளின் உள்ளடக்கமாகும்.

8. "கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP)" என்பது ஒரு தற்சார்பான திட மற்றும் திரவ கூறுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கும்,சு த்திகரிப்பதற்கும், மறுபயன்பாட்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட தரநிலைகளை அடைய உருவாக்கப்பட்ட கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையம்.

9. "இதர கழிவுநீர் (grey water)" என்பது மனித கழிவு இல்லாத வீட்டு கழிவு நீரைக் குறிக்கும். அது வீடு' சுத்தம் செய்தல், சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வரும் தண்ணீராக இருக்கலாம்.

10. சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு என்பது சுத்திகரிப்பு வசதியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்குச் சொந்தமான மற்றும் பொறுப்பான தருமபுரி நகராட்சியினை குறிக்கும்.

11. "சுகாதாரமற்ற கழிப்பறை" என்பது செரித்த மலக்கழிவினை நேரடியாக அகற்றுதல், விலங்குகளால் அகற்றுதல் அல்லது மலக்கழிவினை திறந்த வடிகால் அல்லது குழியில் அப்புறப்படுத்துதல், கழிவு முழுமையாக சிதைவடைவதற்கு முன்பு கழிவுகள் வெளியேற்றப்படும் கழிப்பறைகளைக் குறிக்கும்.

12. "உரிமம்" என்பது உள்ளாட்சி அமைப்புஅல்லது உள்ளாட்சி அமைப்பு குழுமத்திற்குள், கசடுகழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் உள்ளாட்சி அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவரின் எழுத்துப்பூர்வ அனுமதியைக் குறிக்கும்.

13. "உரிமக் கட்டணம்" என்பது, உள்ளாட்சி அமைப்பு அல்லது உள்ளாட்சி அமைப்பு குழுமத்திற்குள் செயல்பட உரிமம் பெறுவதற்கு இயக்குபவர்கள் செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்கும்.

14. "உரிமம் பெற்றவர்" என்பது, கசடுகழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு சென்று வெளியேற்றுவதற்கு தொடர்புடைய அதிகாரியால் உரிமம் வழங்கப்பட்ட எந்தவொரு நபர் அல்லது நிறுவனம் அல்லது சுய உதவிக்குழு அல்லது சங்கம் அல்லது தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.

15. "உள்ளாட்சி அமைப்பு" என்பது தருமபுரி நகராட்சியினை குறிக்கும்.

16. "குழும உள்ளாட்சி அமைப்பு" என்பது மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் தருமபுரி நகராட்சி விதிகளின்படி கசடு சுத்திகரிப்பு நிலையம் அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஒன்றாகப் பயன்படுத்தும் பிற உள்ளாட்சி அமைப்புகளைக் குறிக்கிறது.

17. "குடியிருப்போர்" என்பது தருமபுரி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தினிலோ அல்லது அதன் ஒரு பகுதிகளிலோ குடியிருக்கும் நபரை குறிக்கும்.
18. "நிகழ்விடசுகாதார அமைப்பு(OSS)" என்பது, கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து, சேமித்து, சுத்திகரித்து, உற்பத்தியாகும் இடத்தில் அல்லது அதற்கு அருகில் அகற்றும் ஒரு அமைப்பைக்'குறிக்கிறது.
19. "இயக்குதல் மற்றும் பராமரிப்பு" (O&M) என்பது கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்அல்லது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பைக் குறிக்கும், மேலும் அத்தகைய செயல்பாடுகள், சேவைகள் மற்றும் வசதிகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களையும் உள்ளடக்கியது.
20. "இயக்குபவர்" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் போன்ற சேவைகளை மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு தனிநபர்/ சுய உதவிக்குழு/ சங்கம்/ தனியார் நிறுவனத்தைக் குறிக்கும்.
21. "உரிமையாளர்" என்பது தருமபுரி நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ சொந்தமாக வைத்திருப்பவரை உள்ளடக்கும்.
22. "சுகாதாரக் கழிப்பறை" என்பது நச்சு தொட்டி அல்லது நிகழ்விட சுகாதார அமைப்புகள் அல்லது பாதாள சாக்கடை அமைப்புடன் இணைக்கப்பட்ட கழிப்பறை மற்றும் சிறுநீர் பிறை வளாகத்தை குறிக்கும், இது மனித கழிவுகளை (செரிக்கப்படாத கழிவுகள்) பாதுகாப்பாக அடைத்து அகற்றுவதை உறுதி செய்கிறது, இவை ஒவ்வொன்றும் உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்பட்ட வடிவமைப்பு (design) விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி கட்டப்பட வேண்டும்.
23. "கசடு கழிவு" என்பது ஒரு நச்சு தொட்டி, சேகரிப்பு தொட்டிஅல்லது நிகழ்விட சுகாதார அமைப்பில் உள்ள திரவ மற்றும் திடப்பொருளைக் குறிக்கிறது.
24. "நச்சு தொட்டி" என்பது திடப்பொருட்கள் படிதல் மற்றும் காற்றில்லா செரிமானம் ஆகியவற்றின் கலவையின் மூலம் கழிவுநீரை சுத்திகரிக்கும் ஒரு நிலத்தடி தொட்டியைக் குறிக்கும். நச்சு தொட்டி, வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் தேசிய கட்டிடக் குறியீட்டின் தேவைகளுக்கு இணங்க அமைக்கப்பட வேண்டும். மேலும் 02.01.2023 தேதியிட்ட கசடு கழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) – ன் படிஇருக்க வேண்டும்.
25. "கழிவுநீர்" என்பது கழிவற்ற் கழிவுநீர் (black water) மற்றும் இதர கழிவுநீரின் (grey water) கலவையைக் குறிக்கும், இது சாக்கடைகள் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. இது கழிவுநீர் அல்லது பயன்படுத்தப்பட்ட நீர் என்றும் அழைக்கப்படுகிறது.
26. "கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்" (STPs) என்பது பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்கும், மறுபயன்பாட்டிற்கும் பரிந்துரைக்கப்பட்ட தரத்திற்கு ஏற்ப கழிவுநீர் சுத்திகரிக்கப்படும் இடத்தைக் குறிக்கும்.
27. "கழிவுநீர்க்குழாய்கள்" என்பது பொதுமக்கள் வெளியேற்றும் கழிவுநீரை கொண்டுசெல்வதற்காக பயன்படுத்தப்படும் குழாய்களை குறிக்கும்.
28. "குறிப்பிடப்பட்ட வாகனம்" என்பது கழிவுநீர் தொட்டிகளில் இருந்து கழிவுநீர் மற்றும் கழிவுநீரை வெளியேற்றி கொண்டு செல்வதற்கு உள்ளாட்சி அமைப்பால் அவ்வப்போது அங்கீகரிக்கப்படும் வடிவமைப்பு விவரக்குறிப்புகள் கொண்ட,

உள்ளாட்சி அமைப்பில் இயக்குபவர்களுக்கு சொந்தமான மோட்டார் பொருத்தப்பட்ட பம்புகள் மற்றும் சேமிப்பு தொட்டியுடன் கூடிய உறிஞ்சு வாகனங்களைக் குறிக்கும்.

29. "சுத்திகரிப்பு வசதி" என்பது அவ்வப்போது ஆணையத்தால் அறிவிக்கப்படும் இணைசுத்திகரிப்பு செய்யும்கசடு கழிவு நீர் (FSTP) மற்றும்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (STP) உட்பட, மலக் கசடு மற்றும் கசடு கழிவுகளை சுத்திகரித்து அகற்றும் வடிவமைப்பு விவரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கொண்ட ஒரு சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிக்கும்.

30. "தூய்மை பணியாளர்கள்" என்பது கசடு கழிவு மற்றும் கழிவுநீரை அப்புறப்படுத்துதல், கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடும் உரிமைதாரரால் நியமிக்கப்படும் எந்தவொரு நபரையும் குறிக்கும்.

**3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்:**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு முழு கட்டிடம் அல்லது அதன் பகுதியின் உரிமையாளர் அல்லது குடியிருப்போர் இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்:

1. தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்பிற்குள் சுகாதாரமற்ற கழிப்பறைகள் இல்லை என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கு இணங்கவும், மனிதர்களைக் கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 ஆகியவற்றின் விதிகளின்படியும், சுகாதாரமற்ற கழிப்பறைகளை கட்டுவதும் பயன்படுத்துவதும் கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. நகராட்சி எல்லைக்குள் உள்ள எந்தவொரு வளாகத்தின் உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ எந்தவொரு சுகாதாரமற்ற கழிப்பறையையும் கட்டவோ அல்லது இயக்கவோ கூடாது, இதில் கசடு கழிவுகளை நேரடியாக திறந்த வடிகால், திறந்த நிலங்கள் அல்லது நீர்நிலைகளில் வெளியேற்றும் இடங்கள் அடங்கும். தற்போதுள்ள ஒவ்வொரு சுகாதாரமற்ற கழிப்பறையும் கண்டறியப்பட்டால், அதிகார அமைப்பில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள், பொருந்தக்கூடிய வகையில், உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரின் செலவில் இடிக்கப்பட வேண்டும் அல்லது சுகாதார கழிப்பறையாக மாற்றப்பட வேண்டும். மேலும், மனித கழிவினை கையால் அகற்றுவதற்காக அல்லது சுகாதாரமற்ற கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்காக யாரையாவது பணியமர்த்துவது சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். மீறினால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179-F மற்றும் மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும், அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013 இன் விதிகளின்படி, வழக்குத் தொடருதல் மற்றும் அபராதம் உள்ளிட்ட தண்டனை நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும்.
2. கசடு கழிவுகள் மற்றும் கழிவுகள் சுற்றியுள்ள பகுதிகளை நிரம்பி வழியாமல் அல்லது மாசுபடுத்தாமல் இருப்பதை உறுதிசெய்ய, தேசிய கட்டிடக் குறியீட்டின்படியும், கழிவு நீர் மேலாண்மை விதிமுறை மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்;1(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) விதிகளின்படியும் கழிவு நீர் தொட்டிகள் அமைந்துள்ளன, வடிவமைக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன மற்றும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்யவும்.

3. 1939 ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்தின் தொடர்புடைய பிரிவுகளின்படி, முன் அறிவிப்புடன், குறிப்பிட்ட நேரங்களில் ஆய்வு செய்ய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளை அனுமதிக்கவும்.
4. நச்சு தொட்டி, கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற நிகழ்விட சுகாதார அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப அல்லது நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறிப்பிட்டகால இடைவெளியில் கழிவு நீர் வெளியேற்றும் பணியினை மேற்கொள்ளுதல்.
5. தங்கள் கட்டிடத்திலிருந்துகசடு கழிவுகள் மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்வதற்கு உரிமம் பெற்ற இயுக்குபவர்களை மட்டுமே ஈடுபடுத்துதல்.
6. போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் உரிமம் பெற்ற இயக்குபவர்களால் கழிவுநீர் தொட்டிகள் இயந்திரத்தின் மூலம் சுத்தம் செய்யப்படுவதை உறுதி செய்யவும்.

**4. நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் துணை விதிகளை அமல்படுத்துதல்**

இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து, அதிகாரம் அல்லது சுத்திகரிப்பு நிலைய வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புகள், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ள உரிமை உள்ளது:

1. மாநகராட்சி/நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கட்டிடங்களின் கணக்கெடுப்பு மற்றும் ஆய்வை மேற்கொண்டு, இந்த துணை விதிகளுக்கு இணங்கும் கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழை வழங்குதல்.
2. இந்த துணை விதிகளுக்கு இணங்காத கட்டிடங்களின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர்களுக்கு அறிவிப்புகளை வழங்குதல்.
3. அதிகார வரம்புகளுக்குள் உள்ள கட்டிடங்களின் நச்சுத் தொட்டிகள், கழிவுநீர் தொட்டி அல்லது அதுபோன்ற சுத்திகரிப்பு வசதிகளின் விபர பட்டியல் பராமரிக்கப்பட வேண்டும்.
4. துணை விதிகளை செயல்படுத்துதலை மேற்பார்வை செய்தல்.
5. சுத்திகரிக்கப்படாத கசடுகழிவு மற்றும் கசடுகழிவுகளை திறந்த வெளியில் வெளியேற்றுவதைத் தடுப்பது, கூட்டு சுத்திகரிப்பு மற்றும் கசடுகழிவு மேலாண்மை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படத்தும் விதமாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு பிரச்சாரங்களை நடத்துதல்.
6. இயக்குபவர்கள் உட்பட அவர்களின் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது, அங்கு அவர்களுக்கு கசடு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
7. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் உரிமதாரர்களுக்கு, சுத்திகரிப்பு வசதியின் செயல்பாட்டு நேரம், அகற்றும் செயல்முறை, வெளியேற்ற கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் செல்ல வேண்டிய வழிகளை தெரிவிக்க வேண்டும்.
8. உரிமதாரர்களை நேரடியாக மேற்பார்வை செய்தல் மற்றும் உரிமம் பெற்ற இயக்குபவர்களின் பெயர்களை வெளியிடுதல், உரிமதாரர்களின் விதிமீறல்களைப் புகாரளிப்பதற்கான பொது புகார்/குறை தீர்க்கும் வழிமுறையின் விவரங்களைக் குறிப்பிட்டு பொதுமக்களுக்குத் தெரிவித்தல்.
9. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்வது மற்றும் அகற்றுவதை நேரடியாக ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

10. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பை ஆய்வு செய்து ஒழுங்குபடுத்துதல்.
11. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும் கசடுகழிவின் தரத்தை ஆய்வு செய்தல்.
12. குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்களிடமிருந்து கசடு கழிவுநீரை நேரடியாக அகற்றுவதை அனுமதிக்கவும் அல்லது உறுதி செய்யவும், தேவைப்பட்டால் கூட்டு சுத்திகரிப்பு வசதியை ஏற்படுத்துதல்.
13. இந்த துணைச் விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை எண்; 1 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இணைப்பு 12 (A & B) நாள் 2.1.2023 இன் படி, கசடு கழிவு சுத்திகரிப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, செயல்படுத்தவும். குழும உள்ளாட்சி அமைப்பு அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்புடன், சுத்திகரிப்பு நிலையத்தில் அகற்ற எதுவாக, கிராமப்பஞ்சாயத்துகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செயல்பாட்டுநிதி மற்றும் கட்டுப்பாட்டுப் பொறுப்புகளை ஏறுபடுத்துதல் கழிவு அகற்றுதல், இயக்குதல் மற்றும் பராமரிப்புக் கட்டணம் செலுத்துதல், இயக்குநர் உரிமக்கான விதிமுறைகள் மற்றும் பயனுள்ள, பொறுப்பான FSM சேவைகளை வழங்குவதற்கு ஒழுங்கு கண்காணிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரிவுகளை உட்படுத்துகிறது.
14. கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான கட்டணத்தை நகராட்சியின் மக்கள் தொகைக்கு ஏற்பவும், இந்த துணைச் விதிகளின் இணைப்பு 'அ' இல் உள்ள கணக்கீட்டின் படியும், பொருந்தக்கூடிய வகையில் செலுத்துதல்.
15. அந்தந்த அதிகார வரம்பிற்குள் செயல்படும் இயக்குபவர்கள், செல்லுபடியாகும் கழிவு நீர் அகற்றும் உரிமத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்யவும்.
16. இந்த துணைச் விதிகளை மீறுவதாகக் கண்டறியப்பட்ட உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அல்லது இயக்குபவர்கள் அல்லது உரிமதாரர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு அபராதம் விதிக்கவும்.

இந்த விதிமுறைகளின் நிர்வாகம் மற்றும் அமலாக்க அதிகாரங்கள், நகராட்சி ஆணையரால் அல்லது ஆணையரால் நியமிக்கப்பட்ட அலுவலர்களிடம் உள்ளன.

5.இயக்குபவர்கள்/ உரிமதாரர்கள் நியமனம் மற்றும் செயல்பாடு.

1. இந்த துணைச் விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், தருமபுரி நகராட்சி கழிவுநீர் அகற்றும் சேவைகளை வழங்க ஆர்வமுள்ள இயக்குபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிப்பு ஆணையர் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு வெளியிட வேண்டும். அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பொருந்தும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 374 (e) இன் படிஇயக்குபவர்கள் சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்து, உரிமக் கட்டணமாக ரூ. 2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் கட்டணத்தை செலுத்த வேண்டும்.
3. விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பிறகு, வரையறுக்கப்பட்ட உரிம அளவுகோல்களைப் பூர்த்தி செய்யும் இயக்குபவர்களுக்கு, இந்த துணை

விதிகளின் இணைப்பு 'ஆ'-இல் இணைக்கப்பட்டுள்ள வடிவமைப்பின்படி, வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் உரிமம் வழங்கப்படும்.

4. செல்லுபடியாகும் உரிமம் இல்லாமல் செயல்படும் உரிமதாரர்கள் இந்த துணை விதிகளை மீறுவதாகக் கருதப்படுவார்கள்.
5. ஆணையரால் அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பினரால் அவ்வப்போதுவெளியிடும் வழிகாட்டுதல்களின்படி. உரிமதாரர்கள் நகராட்சியின் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றைப் பராமரித்து இயக்குவதற்கு பொறுப்பாவார்கள்.
6. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின் ஆணையரால் அவ்வப்போது வழங்கப்படும் வழிமுறையின்படி உரிமம் பெற்றவர்கள், நகராட்சிக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்களில், கட்டிடங்களிலிருந்து பெறப்படும் கசடு கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து கொண்டு செல்வதற்கு பொறுப்பாவார்கள்.
7. கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குகொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கழிவுநீர்க் கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விபத்து நடந்த குழும உள்ளாட்சி அமைப்பு அருகிலுள்ள நகராட்சி–க்கு, கசிவு குறித்தும், நிகழ்வு நடந்த 24 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் உரிமதாரர் தெரிவிக்க வேண்டும்.
8. உரிமதாரர்கள் உரிமத்தை நிர்வகிக்கும் விதிகளுக்கு இணங்க வேண்டும்.
9. உரிமம் பெற்றவர்கள் அல்லது நகராட்சிக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்கள் எந்தவொரு வகையான தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இய்ற்கை கழிவுகளையோ கொண்டு செல்லக்கூடாது.
10. உரிமதாரர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்களுக்கும் இணங்க வேண்டும், மேலும் உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதன் செயல்பாடுகளின் செயல்திறனுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பராமரிக்க வேண்டும்.
11. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியில் பயிற்சி பெற்ற துப்புரவுப் பணியாளர்களை மட்டுமே பணியமர்த்த வேண்டும். கசடு மற்றும் கழிவுநீரை சேகரித்து கொண்டு செல்லும் போது, அத்தகைய துப்புரவுப் பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் வழங்க வேண்டும்.
12. சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி ஆணையரால் அவ்வப்போது அறிவிக்கப்படும் செயல்திறன் தரநிலைகளின்படி செய்யப்படுவதை உறுதிசெய்ய, உரிமம் பெற்றவர்கள் போதுமான எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களை, கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு போக்குவரத்திற்கு பணியமர்த்த வேண்டும்.
13. உரிமதாரர்கள் அல்லது நகராட்சியால், மனிதர்களைக்கொண்டு வேலை செய்வதை தடுக்கவும் மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்கான சட்டம், 2013ன் கீழ் உள்ள விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
14. விபத்து ஏற்படும் போது, உரிமதாரர்கள் – மாநகராட்சி/நகராட்சியால் அறிவுறுத்தப்பட்ட அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
15. சுத்திகரிப்பு நிலையத்தில், கசடுகழிவு மற்றும் கழிவுநீரை பாதுகாப்பாக அகற்றுவதற்கு, உரிமம் பெற்றவர்கள் மற்றும் நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்கள் பொறுப்பாவார்கள்.

16. சுத்திகரிப்பு நிலையத்தில் கசடுகழிவு மற்றும் கழிவுநீரை அகற்றுவதற்கு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 376 இன் பிரகாரம், உரிமதாரர்கள் 6000 லிட்டருக்கு மிகாமல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.200 மற்றும் 6,000 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனங்களுக்கு ரூ.300 வெளியேற்று கட்டணமாக செலுத்த வேண்டும்.

6.துணை விதிகளை மீறுவதற்கான அபராதங்கள்.

இந்த துணை விதிகளை மீறினால், அதைக் கவனத்தில் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள்ஆணையரால் எடுக்கப்படும்.

1. ஒரு குற்றம் நிகழும் பட்சத்தில், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் பொருந்தக்கூடிய இந்த துணை விதிகளை மீறுவது குறித்து அதிகாரி விசாரணை நடத்தி, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் அத்தியாயம் X–Aபிரிவு 179–Fஇன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179–B முதல் 179–E வரையிலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவுகள் 374 முதல் 378 வரையிலும் உள்ளடக்கப்படாத இந்த துணை விதிகளை மீறும் பட்சத்தில், ஒவ்வொரு மீறலுக்கும் ரூ. 5,000 வரை அபராதம் அல்லது அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற தொகையை விதிக்க நகராட்சி ஆணையருக்கு உரிமை உண்டு.
3. உரிமதாரர் பத்தி 5 துணை பத்திகள் (v) முதல் (xvi) வரை மீறினால் அல்லது இந்த துணை விதிகளைத் தொடர்ந்து மீறினால், சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பின்ஆணையர் காரணம் கேட்கும் அறிவிப்பை வெளியிடவும் மற்றும் இயக்குபவர்க்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்யவும் உரிமை உண்டு.
4. மேலும், தொடர்ந்து மீறல்கள் ஏற்பட்டால், இந்த துணை விதிகளை மீறுவதை அதிகாரிகள் கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 161, அத்தியாயம் IX மற்றும் 179–G, H. அத்தியாயம் X–A மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 379, அத்தியாயம் XI– பகுதி IV இன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. எந்தவொரு உரிமையாளரோ அல்லது குடியிருப்பாளரோ சுகாதாரமற்ற கழிப்பறையைக் கட்டியதாகவோ, இயக்கியதாகவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்தியதாகவோ கண்டறியப்பட்டால், அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179–F இன் கீழ் தண்டனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள், மேலும் மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டம், 2013 இன் விதிகளின் கீழ் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும், இதில் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி , சிறைத்தண்டனை அல்லது அபராதங்கள் விதிக்கப்படும்.

7. மேல்முறையீடுகள்.

1. இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சிஒரு மேல்முறையீட்டு அமைப்பை உருவாக்கி தேவையான அறிவிப்புகளை வெளியிடும்.
2. உரிமையாளர், குடியிருப்பாளர் அல்லது இயக்குபவர்கள்/உரிமதாரர்கள், நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட காரணம் கேட்பு அறிவிப்பை எதிர்த்து மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவு 179-1, அத்தியாயம் X-A மற்றும் பிரிவு 380, அத்தியாயம் XI- பகுதி IV, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 380 ஆகியவற்றின் படி, அத்தகைய காரணம் கேட்பு அறிவிப்பைப் பெற்ற 30 நாட்களுக்குள், அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.
3. விதி 374 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது ரத்து செய்தல் அல்லது பறிமுதல் உத்தரவு மூலம் உரிமம் வழங்கும் அதிகாரியின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் அல்லதுசட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தைதிரும்ப பெற, அத்தகைய உத்தரவு கிடைத்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம்.
4. மேல்முறையீட்டாளருக்கு விசாரிக்க வாய்ப்பு அளித்த பிறகு, மேல்முறையீட்டு அதிகாரி மேல்முறையீட்டின் மீது உத்தரவுகளைப் பிறப்பிப்பார்.
5. அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க நகராட்சி ஆணையர், உரிமையாளர் மற்றும் இயக்குபவர்கள்/உரிமதாரர்கள் பொறுப்பாவார்கள்.

8.பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்

இந்த துணை விதிகளைச் நடைமுறைபடுத்துவதில் ஏதேனும் இடர்பாடு ஏற்பட்டால் இந்த துணை விதிகளைத் திருத்தம் செய்து, தருமபுரி மாவட்டத்தின் அரசிதழில் வெளியிட வேண்டும்.

9.பாதுகாப்பு.

இந்த துணை விதிகளில் ஏதேனும் ஒன்று, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 அல்லது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆகியவற்றின் ஏதேனும் விதிகளுக்கு முரணாக இருந்தால், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி 'அமைப்புகள் விதிகள், 2023 அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகள் 2019 அல்லது அவற்றின் அடுத்தடுத்த திருத்தங்கள் இந்த் துணை விதிகளை விட மேலோங்கும். அதே நேரத்தில் மற்ற அனைத்து துணை விதிகளும் நடைமுறையில் இருக்கும்.

இணைப்பு 'அ'

கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணைச சட்டங்களுக்கான

கசடு சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் – சூத்திரம்.

| | | |
|---|---|---|
| சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை அல்லது சுத்திகரிப்பு நிலையம் வசதி பெறும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை<br>------------------------------------<br>(சுத்திகரிப்பு நிலையம் வசதி வழங்கும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை + சுத்திகரிப்பு நிலையம் வசதி பெறும் உள்ளாட்சி அமைப்பு மக்கள் தொகை) | X | ஒரு வருடத்திற்கான சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கட்டணம் |

*நகர்ப்புற–கிராமப்புறக் குழுக்களுக்கு, நச்சுதொட்டிகளைக் கொண்ட வீடுகளுக்கு விகிதாசார மக்கள் தொகை, செலவுப் பகிர்வு சூத்திரத்திற்கானமக்கள்தொகையாகக் கருதப்படுகிறது.

இணைப்பு 'ஆ'

கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகளுக்கான

படிவம் 12

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் விதி 374 (1))

கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுவதற்கான தனியார் வாகனங்கள்இயக்குபவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான / புதுப்பிப்பதற்கான விண்ணப்ப படிவம்.

| 1. விண்ணப்பதாரர் விவரங்கள் (தனிநபர் / நிறுவனம்/கூட்டாண்மை நிறுவனம்): | | |
|---|---|---|
| 1 | தனிநபர் / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்கள் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் பெயர்: | |
| 2 | வயது ஆண்டுகளில்: | |
| 3 | தந்தை/கணவர் பெயர்: | |
| 4 | விண்ணபதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்து இயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் முகவரிச் சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | விண்ணப்பதாரரின்(களின்) / நிறுவனத்தின் அனைத்துஇயக்குநர்களின் / கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து கூட்டாளிகளின் புகைப்பட அடையாள சான்று (சான்றின் நகல் இணைக்கப்பட வேண்டும்): | |
| 6 | ஜிஎஸ்டி எண்: | |
| 7 | பான் எண்: | |
| 8 | மின்னஞ்சல் அடையாளம்: | |
| 9 | தொடர்பு எண்: | |
| 10 | உரிமத்தின் தன்மை: | புது/புதுப்பித்தல் |
| 11 | புதுப்பித்தல் எனில், தற்போதுள்ள உரிமத்தின் விவரம்: | |

| | | |
|---|---|---|
| 12 | கசடு / கசடுகழிவை சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றியதற்காக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா? (ஆம் / இல்லை) | |
| 13 | ஆம் எனில், அத்தகைய வழக்குகளின் விவரங்களை வழங்கவும்: | |
| 14 | ESI மற்றும் EPF பதிவு எண் (பொருந்துமெனில்): | |
| 15 | விவரங்கள் (நகல் இணைக்கப்பட வேண்டும்): | |

**2.ஓட்டுநர் விவரங்கள்:**

| வ. எண். | பெயர் | பாலினம் மற்றும் பிறந்த தேதி | ஓட்டுநர் உரிம எண் மற்றும் செல்லுபடியாகும் நாள் (நகல் இணைக்கப்பட வேண்டும்) | குடியிருப்பு முகவரி சான்று நகல் இணைக்கப் பட வேண்டும்) | வருட அனுபவம் மற்றும் இடங்கள் | கைபேசி/ தொடர்பு எண் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள் / சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை அகற்றலுக்காக பதிவுசெய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால் | | | | | | |

**3.வாகன விவரங்கள்**

| வ.எண் | DESCRIPTION | விளக்கம் |
|---|---|---|
| 1 | வாகன பதிவெண் | |
| 2 | வாகன பதிவு சான்றிதழ் புத்தக எண், செல்லுபடி நிலையுடன் நகல் இணைக்கப்பட வேண்டும் | |
| 3 | உரிமைதன்மை: | |
| 4 | குத்தகைக்கு விடப்பட்டது(குத்தகை ஒப்பந்தத்தின் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 5 | வாகன மாதிரி: | |
| 6 | வாகன வகை [நான்கு சக்கர வெற்றிட வாகனம் அல்லது அதற்கு மேல்) (தயவுசெய்து குறிப்பிடவும்)) | |
| 7 | வாகனத் திறன் (லிட்டரில்): | |
| 8 | வாகன உடற்பாக எண்(Chase No): | |
| 9 | எஞ்சின் எண். | |
| 10 | வாகன தகுதி சான்று (FC)செல்லுபடியாகும்காலம் | |
| 11 | அனுமதி செல்லுபடியாகும்காலம் | |
| 12 | எடை(கிலோகிராமில்) | |

| | | |
|---|---|---|
| | (அ) மொத்தம்<br>(ஆ) காலியான நிலையில்<br>(இ) கழிவு ஏற்றப்பட்ட நிலையில் | |
| 13 | காப்பீடு செல்லுபடியாகும் காலம் | |
| 14 | மாசு சான்றிதழ் செல்லுபடியாகும்காலம் | |
| 15 | வேகக் கட்டுப்பாட்டுக் கருவி நிறுவப்பட்டுள்ளதா? (ஆம்/இல்லை): | |
| 16 | ஜிபிஎஸ் நிறுவப்பட்டுள்ளதா (ஆம்/இல்லை) வேலை செய்கிறதா (ஆம்/இல்லை) சேதமடையாத அறை (ஆம்/இல்லை): | |
| 17 | வரி செல்லுபடியாகும் காலம் | |
| விபத்துக்களின் வரலாறு / பதிவு செய்யப்பட்ட வழக்குகள் சட்டத்திற்கு புறம்பான கசடு / கசடு கழிவை வெளியேற்றுதலுக்காக பதிவு செய்யப்பட்ட புகார்கள், ஏதேனுமிருந்தால், அதன் விவரங்கள் | | |
| 4.செயல்பாட்டு நேரங்கள் | | |
| 5.வழித்தடம் செயல்பாட்டுப் பகுதி: | | |
| 6. வெளியேற்றும் இடம் | | சம்மந்தப்பட்ட நகராட்சிகளால் அளிக்கப்பட வேண்டும். |

## உறுதிமொழி

என்னால், அளிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்தவரையில் மற்றும் நான் நம்புகிற வரையில் உண்மை என்று நான் சான்றளிக்கிறேன். இணைக்கப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் நான் படித்து புரிந்து கொண்டேன் என்றும் நான் சான்றளிக்கிறேன் மற்றும் அவற்றுக்கு கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

தேதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம்:

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

இந்த படிவம் பின்வருவனவற்றுடன் நகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

a. வாகனங்கள் ஆவணங்கள் பதிவுச் சான்றிதழ் வாகன தகுதி சான்றிதழ்,சாலை வரி காப்பீடு சான்றிதழ் மற்றும் பொருட்கள் வாகன அனுமதி மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அனைத்து பிற விவரங்கள்..

b. வாகனத்தின் புகைப்படங்கள்;

c. என் தகட்டைக் (Number Plate) காண்பிக்கிற வாகனத்தின் முன்பக்க மற்றும் பின்பக்கபுகைப்படங்கள்.

d. விண்ணப்பதாரரைப் பொறுத்தவரையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியஆவணங்கள்: விண்ணப்பதாரரின்(களின்) முகவரி சான்று, விண்ணப்பதாரரின்(களின்) புகைப்பட ID சான்று, GST பதிவு சான்றிதழின் நகல், பான் அட்டையின் நகல், முன்னர்

வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் (ஏதேனுமிருந்தால்), ESI மற்றும் EPF பதிவுச் சான்றிதழின் நகல் (பொருந்துமெனில்).

e. பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்களுக்கும், ஊழியர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆவணங்கள் அரசால் அளிக்கப்பட்ட புகைப்பட அடையாள மற்றும் முகவரி சான்று, மருத்துவ சான்றிதழ் (மாநில அரசின் பதிவு செய்யப்பட்ட மருத்துவரால் அளிக்கப்பட்டது) மற்றும் ஓட்டுநர்உரிமம்.

f. பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.10 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) காப்பீடு செய்யப்பட்ட தனிநபர் விபத்து காப்பீட்டு ஆவணம்..

g. ரூ.2000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) உரிமக் கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்தும் முறை தருமபுரி நகராட்சியின் ஆணையாளர் பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலை.

2. சரிபார்த்தல் நோக்கத்திற்காக அசல் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு ஆவணமும் உரிம காலத்தில் காலாவதியானால், உரிமம் பெறுபவர் அந்த ஆவணம் செல்லுபடி காலத்தின் கடைசி தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஒரு புதிய செல்லுபடியாகக்கூடிய சான்றிதழ் பெற வேண்டும். பணியாளரில் ஏதேனும் மாற்றம் இருந்தால், புதிய பணியாளரின் ஓட்டுநர் உரிமத்தின் புகைப்பட நகல், புகைப்பட அடையாளச் சான்று மற்றும் முகவரிச் சான்று ஆகியவை அத்தகைய பணியமர்த்தலிலிருந்து ஏழு நாட்களுக்குள் உரிமம் பெறுபவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவம் உரிமக் கட்டணம் மற்றும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட ஒப்புகை ரசீது, உரிமத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படும் வரை வைத்திருக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட ஆவணங்களும், தகவல்களும், அந்த விண்ணப்பத்தினை திருப்திகரமாக செயலாக்கம் செய்வதற்கு தேவையான அனைத்து விபரங்களையும் வழங்கவில்லை எனில், ஆணையாளர், விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையென கருதுகிற அத்தகைய கூடுதல் விவரக்கூறுகளையும், விவரங்களையும் வழங்குமாறு கேட்கலாம். விண்ணப்பம் மற்றும் அனைத்து முழுமையான / சம்மந்தப்பட்ட விவரங்கள் பெறப்பட்ட பிறகு முப்பது நாட்களுக்குள் உரிமம் ஆணையாளரால் வழங்கப்படும்..

3. சட்டம் அல்லது விதிகளின்படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் அல்லது கேட்கப்பட்ட கூடுதல் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்கத் தவறுகிறார் எனில் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் உண்மையென சன்றளிக்கப்பட முடியாது எனில், ஆணையாளர் எழுத்துப்பூர்வமான காரணங்களுக்காக அந்த விண்ணப்பத்தினை நிராகரிக்கலாம் அல்லது உரிமத்தினை புதுப்பிக்க மறுக்கலாம் மற்றும் அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரருக்கு அளிக்க வேண்டும்.

4. ஒரு உரிமத்தினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பம், உரிமம் காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இந்தப் படிவத்தில் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் உரிமை வழங்குவதற்கு பொருந்துகிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உரிமத்தினை புதுப்பிப்பதற்கும் பொருந்தும். அத்தகைய புதுப்பித்தல் விண்ணப்பத்திற்கு அது வரப்பெற்றியிருந்து 20 நாட்களுக்குள் மற்றும் உரிமம் காலாவதியாகும் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தீர்வு காண வேண்டும். உரிமத்தினை புதுப்பிப்பதற்கு, நகராட்சியால் வரையறுக்கப்படுகிற விகிதத்தில் உரிமக் கட்டணம் விண்ணப்பதாரரால் செலுத்தப்பட வேண்டும்..

## சரிபார்ப்பு பட்டியல்

| வ. எண். | | வாகனங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டது | | | |
|---|---|---|---|---|---|
| 1 | விண்ணப்பதாரரின் முகவரி சான்று | | | | |
| 2 | விண்ணப்பதாரரின் புகைப்பட அடையாளச் சான்று | | | | |
| 3 | GST பதிவு சான்றிதழின் நகல் | | | | |
| 4 | PAN அட்டையின்நகல் | | | | |
| 5 | முன்னர் வழங்கப்பட்ட உரிமத்தின் நகல் ஏதேனும் இருந்தால் | | | | |
| 6 | ESI மற்றும் EPF பதிவு சான்றிதழ்களின் நகல் பொருந்தினால் | | | | |
| 7 | பதிவு சான்றிதழ் | | | | |
| 8 | வாகன தகுதி சான்றிதழ் | | | | |
| 9 | சாலை வரி | | | | |
| 10 | காப்பீட்டு சான்றிதழ் | | | | |
| 11 | வாகன அனுமதி | | | | |
| 12 | வாகனத்தின் புகைப்படம் வாகன எண் தகட்டினை காண்பிக்கிற முன்பக்கம் மற்றும் பின்பக்கம் | | | | |
| 13 | அரசு புகைப்பட ID மற்றும் முகவரி சான்று (ஆதார்) ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | |
| 14 | மருத்துவ சான்றிதழ் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | |
| 15 | தனிநபர் விபத்து காப்பிட்டு ஆவணம் ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் | | | | |
| 16 | ஓட்டுநர் உரிமம் | | | | |
| 17 | வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட கையொப்பமிடப்பட்ட உறுதிமொழி | | | | |

## கசடு அல்லது கசடுகழிவு போக்குவரத்து இயக்குபவர் உரிமத்திற்கான விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டிய உறுதிமொழி.

1. 2013-ம் ஆண்டு மனிதக்கழிவுகளை கையாளுபவர்களை பணியமர்த்தப்படுவதைத் தடைசெய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டத்தின்கீழ் தூய்மை பணியாளர்கள் மீதான மற்றும் தூய்மை பணியாளர்கள் கழிவுநீர்க் அமைப்புக்குள் அல்லது கழிவுநீர்த் தொட்டிக்குள் செல்வதன் மீதான தடை குறித்த தமிழ்நாடு அரசின் ஆணைகளை நான் (விண்ணப்பதாரரின் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி) அறிவேன். அந்த சட்டம், விதிகள், இதுசம்மந்தமாக வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள் மற்றும் அறிவுறுத்தங்களுக்கு கட்டுப்படுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.
2. கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதல் தொடர்பான சட்டம், விதிகள், அவ்வப்போது வெளியிடப்படும் ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நியந்தனைகளை நான் பின்பற்றுவேன்..
3. நான், கசடு அல்லது கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதல் செயல்பாடுகளை அனைத்து பாதுகாப்பு விதிகள் மற்றும் நச்சு வாயுக்கள் உட்பட இருக்கிறதா என்பதற்கான சோதனை, வழிகாட்டு நெறிமுறைகள் உட்பட பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் கடைபிடித்த பின்பே மேற்கொள்வேன் ... அளிப்பேன்.

4. சட்டம், விதிகள், ஒழுங்குமுறைகள், துணைவிதிகள், அறிவிக்கைகள், அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் வகையினங்களில் எதனையும் பின்பற்றவில்லை எனில், எனக்கு அளிக்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படலாம் என்பதை நான் புரிந்துகொண்டேன். மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது என்றும் அவை முழுமையாக கடைப்பிடிக்கப்படும் என்றும் இதன்மூலம் நான் உறுதிகூறப்படுகிறது..

தேதி

பெயர்:

கையொப்பம்

தருமபுரி நகராட்சி

படிவம் 13

விதி 374(1)மற்றும் (4–ஐப் பார்க்கவும்) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023

**கசடு மற்றும் கசடுகழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் அகற்றுதலுக்கான உரிமம்**

ன்

இல் வசிக்கும்,

மகன்/மனைவி/மகள்,திரு/திருமதி/செல்வி

உரிம எண் :

உரிமம் வைத்திருப்பவர் :

வாகனப் பதிவு எண்(கள்) :

ஓட்டுநர்கள் பெயர், ஓட்டுநர் உரிம எண்னுடன் :

உரிமம் வைத்திருப்பவருக்கு ஒதுக்கப்பட்ட

வழித்தடங்கள் / பகுதி(கள்) :

வெளியேற்றும் இடம்(ங்கள்) :

செயல்பாட்டு நேரம் :

இந்த உரிமம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு நடைமுறையில் இருக்கும், மற்றும் இது மாற்றத்தக்கதல்ல.

செல்லுபடியாகும் காலம்------------------முதல்-------------------வரை

உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளன.. அவ்வப்போது அரசால் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால்/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்படும் அனைத்து விதிகள், ஒழுங்குமுறைகள்.அறிவுறுத்தங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்.

1. உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து உரிமம்இரண்டு வருடங்களுக்கு செல்லுபடியாகும். மற்றும் அது மாற்றத்தக்கதல்ல அந்த உரிமம் வெளிப்படையாகத் தெரியும் வகையில் குறிப்பிட்ட வாகனத்தின் முன்பக்க கண்ணாடி முகப்பில் மீது காட்சிப்படுத்தப்பட வேண்டும்..
2. அந்தக் குறிப்பிடப்பட்ட வாகனம் எந்தவொரு வகையிலுமான தொழிற்சாலை கழிவுகள் அல்லது தொழிற்சாலை கழிவுகளுடன் கலந்த இயற்கை கழிவுகளை சேகரித்தல் மற்றும் ஏற்றிச்செல்லுதலுக்கு பயன்படுத்தப்படக்கூடாது..
3. கசடு மற்றும் கசடு கழிவை சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின்போது உரிமத்தினை கேட்டால் உரிமம் பெறுபவர் அதனை காட்ட வேண்டும்..
4. உரிமம் பெறுபவர்,–
   (அ) செயல்பாட்டு நேரங்கள்; மற்றும்
   (ஆ) உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, வாகன செயல்பாட்டு பகுதி / வழித்தடங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
5. ஏற்றிச் செல்லும்போது ஏற்படும் கசிவுகளை சுத்தப்படுத்தத் தவறினால், அதனை சுத்தப்படுத்துவதற்கு, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் செய்யப்படும் அதுதொடர்பான செலவுகளை, அபராதக் கட்டணங்களுடன் சேர்த்து, உரிமம் பெறுபவர் செலுத்த வேண்டும்.
6. இந்த உரிமம் வழங்குதல் என்பது, பல்வேறு மற்ற பொருந்தக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின்கீழ், வியாபாரம் அல்லது வர்த்தகம் அல்லது நடவடிக்கைக்கு வேண்டப்படுகிற தேவைகள் அல்லது உரிமங்கள் அல்லது இசைவுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக பொருள்படாது.
7. உரிமம் பெறுபவர் கசடு மற்றும் கசடுகழிவை, உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அதனை கொட்டுவதற்கான வசதிகளில், செயல்பாட்டு நேரங்களின்போது, கொட்ட வேண்டும், கழிவுநீர்த் தொட்டிகள் / குழிகளிலிருந்து கசடை அகற்றுவதற்கும், அதனை கொட்டுவதற்கென நியமிக்கப்பட்ட வசதிகளுக்கு கசடு மற்றும் கசடுகழிவை எடுத்துச் செல்வதற்கும், உரிமம் பெற்ற இயக்குபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
8. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை, அதனை வெளியேற்றுவதற்கான, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வசதிகள் தவிர, எந்தவொரு இடம் அல்லது தளத்திலும் வெளியேற்றுவதாக கண்டறியப்பட்டால், மேற்படி உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாகக் கருதப்படும்.
9. உரிமம் பெறுபவர், சேகரித்தல், ஏற்றிச் செல்லுதல் மற்றும் கொட்டுதலுக்கான ஒவ்வொரு ஊர்திப் பயணத்தையும் பதிவு செய்கிற ஒரு ஊர்திக் குறிப்பேட்டை பராமரிக்க வேண்டும் மற்றும் அதனை நேர்வுக்கேற்ப, சம்மந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு, ஒரு வருடத்தில் உள்ள ஒவ்வொரு காலாண்டின் 10–ம் நாளுக்கு முன்பாகவும் சமர்ப்பிக்க வேண்டும்.
10. உரிமம் பெறுபவர், கசடு மற்றும் கசடுகழிவை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட வாகனத்தில், செயற்கைக்கோள் வழிகாட்டிக் கருவி (GPS) அல்லது, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வாகன கண்காணிப்பு அமைப்பை பொருத்த வேண்டும். உரிமம் பெறுபவரின் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு, அந்த GPS கருவியை பொருத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். உரிமம் பெறுபவர், GPS கருவி செயல்பாட்டில் உள்ளது மற்றும் தடையின்றி தரவுகளை அனுப்புகிறது என்பதை

உறுதிப்படுத்த வேண்டும். வரப்பெறும் தரவுகளில் ஏற்படும் தடை, உரிமத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதாக கருதப்படும்

11. உரிமம் பெறுபவர், எந்தவொரு விபத்தை தவிர்க்கும் வகையில், குறிப்பிட்ட வாகனத்தை நன்கு செயல்படுகின்ற நிலையில் பராமரிக்க வேண்டும்.

12. உரிமம் பெறுபவர், கழிவுநீர் சேகரிப்பு இடத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்குகொண்டு செல்லப்படும்போது, கழிவுநீர் கசிவு ஏற்படாமல் உரிமதாரர் உறுதி செய்ய வேண்டும். கழிவுநீர் தற்செயலாகக் கசிந்தால், உரிமதாரர் உடனடியாக கழிவுநீர்க் கசிவைக் கட்டுப்படுத்தவும்,சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கசிவு ஏற்பட்ட இடங்களிலிருந்து உடனடியாக அனைத்து கசிவுகளையும் அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமம் பெறுபவர் அருகில் அமைந்துள்ள, நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலகத்திற்கு மற்றும் / அல்லது அந்த நிகழ்வு நடந்த இடத்திற்கு அருகில் உள்ள கழிவுநீர் வெளியேற்றும் வசதிக்கு (decanting facility), கசிவு குறித்தும் அந்நிகழ்வு நடந்த பிறகு உடனடியாக எடுக்கப்பட்ட. நடவடிக்கை குறித்தும் தெரிவிக்க வேண்டும்..

13. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்கள்,காலமுறை பயிற்சிக்கு செல்வதையும், நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால், அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகிற பிற நடவடிக்கைகளில் பங்கேற்கிறார்கள் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்..

14. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து ஓட்டுநர்களும், தூய்மை பணியாளர்களும், கழிவுநீர்க்குழாய்கள் மற்றும் கழிவுநீர்த் தொட்டிகளை பராமரிப்பதற்கும், இயக்கமுறை சுத்தப்படுத்தலுக்கும், அவ்வப்போது அறிவிக்கை செய்யப்படுகிற சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நிலையான இயக்க நடைமுறைகளை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஓட்டுநர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு உபகரணங்கள் / பாதுகாப்பு விசைமாற்றிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் கசடு மற்றும் கசடுகழிவு சேகரித்தல், ஏற்றிச்செல்லுதல் மற்றும் வெளியேற்றுதலின் போது அவை பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்..

15. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநரும், தூய்மை பணியாளர்களும்வருடாந்திர மருத்துவ பரிசோதனைக்கு செல்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். பரிசோதனை குறித்த பதிவேட்டை உரிமம் வழங்கும் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்..

16. உரிமம் பெறுபவர், பணியமர்த்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஓட்டுநர் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கும், ஒவ்வொரு வருடமும் ரூபாய் 10 இலட்சத்திற்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) தனிநபர் விபத்து காப்பீடு எடுக்க வேண்டும். காப்பீட்டு ஆவணத்தினை, உரிமம் வழங்கும்போதும் புதுப்பிக்கும்போதும் நேர்வுக்கேற்ப, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

17. அனைத்து நேரங்களிலும், வாகனம் மற்றும் உபகரணத்தின் பாதுகாப்பான இயக்கத்திற்கு, ஓட்டுநர் மற்றும் சேவை வழங்குநர்கள் பொறுப்பாவார்கள். போக்குவரத்து விதிகள் அனைத்து நேரங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். கசடு மற்றும் கசடுகழிவினை ஏற்றிச்செல்வதற்கு போதுமான பயிற்சி பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஓட்டுநர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து விபத்துகள் மற்றும் நற்குறிப்புகளும் உரிமம் பெறுபவரால் மறுஆய்வு செய்யப்படவும், விசாரிக்கப்படவும் வேண்டும். கசடு கசிவு ஏதும் இல்லை அல்லது வாகனத் தொட்டிக்கு வெளியில் ஏதும் கசியவில்லை

என்பதை உறுதிப்படுத்துவதற்கு, பொதுச் சாலைகளில் ஓட்டுவதற்கு முன்பு, ஓட்டுநர்கள் அனைத்து வாகனங்களையும் ஆய்வு செய்ய வேண்டும். கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும், அனைத்து நேரங்களிலும், சுண்ணாம்பு அல்லது குளோரின் சாயம் போன்ற கசிவு கட்டுப்பாடு அல்லது உறிஞ்சு பொருட்கள் மற்றும் தொற்றுநீக்க பொருட்கள் வைத்திருக்கப்பட வேண்டும். கழிவுநீர் திறப்புவாய், வடிகால் அமைப்பு பகுதிகள், கால்வாய்கள், சிற்றோடைகள், ஆறுகள் அல்லது மற்ற தண்ணீர் பெறுகிற அமைப்புகள் அல்லது நிலத்தில் கசடு அல்லது கசடுகழிவு எதுவும் வெளியேற்றுவதற்கு அனுமதிக்கக்கூடாது; மற்றும் வெளிப்படையான படிவங்கள் முறையாக நிரப்பப்பட வேண்டும்

18. உரிமம் பெறுபவர், 2013-ம் ஆண்டு மனித துப்புரவுப் பணியாளர்களாக பணியமர்த்தலை தடைசெய்தல் மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டத்தின் (2013-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 25)வகையினங்களுக்கு மாறாக, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, மனித தூய்மை பணியாளரையோ அல்லது எந்தவொரு நபரையுமோ, ஒரு கழிவுநீர்திறப்புவாய் அல்லது கழிவுநீர்த் தொட்டியினை தீங்குவிளைவிக்கிற வகையில் சுத்தப்படுத்துவதில், ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது.

19. உரிமம் பெறுபவர், நிறுவனத்தின் பெயர், தொடர்பு எண், நிறுவனத்தின் அடையாளம் மற்றும் கசடு ஏற்றிச்செல்லும் வாகனத்தின் ஊர்திக்கூடு எண் ஆகியவை கசடை ஏற்றிச் செல்வதற்கு பய்ன்படுத்தப்படும் வாகனத்தின் இருபுறமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேற்படி தகவல் குறைந்தபட்சம் 3 அங்குலம் உயரமுள்ள நிலையான மற்றும் தெளிவான எழுத்துக்களை பயன்படுத்தி எழுதப்பட வேண்டும் மற்றும் அது ஒரு பிரதிபலிப்பு பொருளால் செய்யப்பட்டிருக்க வேண்டும்

20. ஒரு செல்லுபடியாகக்கூடிய உரிமம் வைத்திருக்கிற எந்தவொரு உரிமம் பெற்றவரும், கசடை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற அனைத்து வாகனங்களையும், வாகனத் தொட்டிகளையும், பின்வரும் தேவைகளின்படி பராமரிக்க வேண்டும்:

(i) கசடுகழிவு மற்றும் வீட்டுக்கழிவுகளை ஏற்றிச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகிற குறிப்பிட்ட வாகனம், கசடு மற்றும் கசடுகழிவை பாதுகாப்பாக ஏற்றிச்செல்லும் வகையில் கசிவற்ற ஊர்திக்கூட்டையும், பூட்டமைப்பையும் கொண்டிருக்க வேண்டும் மற்றும் மற்றொரு வாகனம் அல்லது எந்தவொரு நிலையான கட்டமைப்புடனும் ஏற்படும் மோதலை தாங்குவதாக இருக்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட வாகனம், சாலையில் செல்வதற்குரிய தகுதி குறித்த நில போக்குவரத்து அலுவலக பாதுகாப்பு தரநிலைகளின்படி, நன்கு இயங்கும் நிலையில் இருக்க வேண்டும்.

(iii) சேகரிப்பு வாகனம் மற்றும் வாகனத்தொட்டி அதிகப்படியான நாற்றம் அல்லது பொதுச்சுகாதார தீங்கினை தடுக்கும் வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

(iv) குறிப்பிட்ட வாகனம் நீர்க்கசிவின்றி இருக்க வேண்டும்.

(v) அனைத்து குழாய்கள், வால்வுகள் மற்றும் இணைப்புகள் சுத்தப்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்

(vi) மாற்றும்போது அல்லது ஏற்றிச்செல்லும்போது எந்தவொரு பொருளும் கசியாது அல்லது வாகனத்தொட்டிக்கு வெளியில் செல்லாது என்கிற வகையில் அனைத்து உள்புகும் மற்றும் வெளியேறும் இணைப்புகளும் கட்டுமானம் செய்யப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டும்.

(vii) கசடுகழிவு சுத்திகரிப்பு நிலையத்தில்தெளித்தல் அல்லது வெள்ளப்படுத்துதல் இல்லாத அளவிற்கு வெளியேற்றுப் வேகத்தினை கட்டுப்படுத்தும் வகையில் வெளியேற்று வழிகள் வடிவமைக்கப்பட வேண்டும்.

(viii) வெளியேற்றுக் குழாயானது, வாகனத் தொட்டியின் முடிவில் இருந்து ஆறு அங்குலத்திற்கு குறையாமல் வெளியில் நீட்டிக்கொண்டிருக்க வேண்டும், மற்றும்

(ix) வெளியேற்றுக் குழாயின் முடிவுப்பகுதியில், திருகித் திறக்கும் மூடி பொருத்தப்பட வேண்டும்.

## படிவம் 14

(விதி 377 (b)–ஐப் பார்க்கவும்]

### கசடு மற்றும் கசடுக்கழிவு ஏற்றிச்செல்லும் பயண விவரங்களுக்கான ஊர்திக் குறிப்பேடு

| வ எண், | பயண தேதி | வாகன எண் | விண்ணப்பதாரரின் உரிம எண் | பயண நேரம் | | சேகரிக்கும் இடம் | வெளியேற்றும் இடம் | மொத்த பயண தூரம் | வளாகங்களின் வகை | ஓட்டுநரின் பெயர் | ஓட்டுநர் தொடர்பு எண் | கையொப்பம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்பம் | முடிவு | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

கீழே உள்ள TN நகராட்சியின்சட்டத்தின் பிரிவு 199, அத்தியாயம் XI, பக்கம் 109 (ஆவணத்தில்குறிப்பிடப்பட்டுள்ளபடி) ஐப் பார்க்கவும்.
https://drive.google.com/file/d/1k4ZXdJSD103c7uwo1MqS3C2QFr4yHH16/view?usp=drive

"பக்கம் 193 அத்தியாயம் X–A–ஐப் பார்க்கவும் – கசடு மற்றும் கசடுகழிவு–
https://drive.google.com/file/d/119SdkuL45fRIS–lh2CVcSzYXGK5cRtx/view?usp=drive

"நகராட்சியின்விதிகள் 2023' இன் பக்கம் 368 அத்தியாயம் XI–பகுதி IV–ஐப் பார்க்கவும் – கீழே கொடுக்கப்பட்டுள்ளது –
https://drive.google.com/file/d/1Ebv–8cFAvTJlCP3u7MdnMg1yG1qugXbL/view?usp=drive.

"தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019 கீழே உள்ள இணைப்பில் உள்ளது–
https://drive.google.com/file/d/1Rw07rCUi5gGXS4s7u300fc50s6dNbKF7/ view?usp=drive

"இந்தியாவின் தேசிய கட்டிடக் குறியீடு 2016–2வது தொகுதியைப் பார்க்கவும்–" செப்டிக் டேங்க் பலஇடங்களில்குறிப்பிடப்பட்டுள்ளது–https://drive.google.com/file/d/1wl4FM4HtJJnUMYCvLGOaObPsJ9tzlomT/view?usp=drive

"புதிய OSS–கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்களுக்கான பக்கம் 18, பிரிவு 2.3.1–கட்டமைப்பு தரநிலைகளைப் பார்க்கவும், அரசாணை நிலை எண் 1, தேதியிட்ட 02.01.2023 கீழே உள்ள இணைப்பில் காணலாம்.

"பக்கம் 47, அத்தியாயம் VI. (நுழைவு மற்றும் ஆய்வு அதிகாரங்கள்), பிரிவு 48 ஐப் பார்க்கவும்.

சுகாதார அதிகாரி அல்லது அவரால் இதற்காக அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரும், எந்தவொரு நியாயமான நேரத்திலும், பரிந்துரைக்கப்பட்ட அறிவிப்புக்குப் பிறகும், இந்தச் சட்டத்தின் விதிகளையோ அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதி, துணைச் சட்டம் அல்லது உத்தரவையோ நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நிபந்தனையையும் உள்ளிடலாம்.

02.01.2023 தேதியிட்ட கசடுகழிவு மேலாண்மை விதிமுறைகள் மற்றும் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள், அரசாணை நிலை எண் 1, இணைப்பு 12 (A) மற்றும் இணைப்பு 12 (8) க்கு பக்கம் 111.

"PEMSR சட்டம் 2013 ஐ கீழே காணலாம்"

tos.ve.google.com/field/ToKoRuV4locfdMesukgDTDSzaAWMd-en/view?usp=drive

இணைப்பு

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பக்கம் 371-பிரிவு 376 "பதவி நீக்கக் கட்டணம்" ஐப் பார்க்கவும்.

டைட்ஸ்

strive.google.com/open?id=1mYRKIAHsSqle38tMQ6xnPMgW5itz&usp=drive_copy

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் பிரிவுகள் 179-8 முதல் பிரிவுகள் 179 E வரை உள்ள பகுதிகளுக்கு, கீழே உள்ள இணைப்பில் பக்கம் 194 ஐப் பார்க்கவும்-

https://drive.google.com/file/d/1yok@hhjXVIO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022-ஆவணத்தின் பிரிவு 179-F, அத்தியாயம் X-Aக்கு பக்கம் 196-ஐ கீழே உள்ள இணைப்பில் பார்க்கவும்

https://drive.google.com/file/d/1yok@hhjXVIO280mVSmpdRjAco-MgOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பக்கம் 100, பிரிவு 161ஐ கீழே உள்ள இணைப்பில்பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1k4ZXdJSD103c7uwo1MgS3C2QFr4yHH6/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரிவுகள் 179-G, H, அத்தியாயம் X-A க்கு பக்கம் 196 ஐப் பார்க்கவும்.(திருத்தம்) சட்டம், 2022, கீழே உள்ள இணைப்பில் https://drive.google.com/file/d/1yok9hhjXVIO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

**தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 இன் பிரிவு 379, அத்தியாயம் XI- பகுதிIVக்கு பக்கம் 371 ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1Ebv-8cFAVTJICP3u7MdnMg1yG1qugXbL/view?usp=drive.link

"தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 179-F இன் கீழ் பக்கம் 196 ஐப் பார்க்கவும்.2022

https://drive.google.com/file/d/1yok9hhjXViO280mVSmpdRjAcc-MgOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 இன் X-A அத்தியாயத்தின் 179-1 பிரிவுகளுக்கு பக்கம் 197 ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1yok@hhjXViO280mVSmpdRjAcc-MqOSdR/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 380, அத்தியாயம் XI- பகுதிIVக்கு பக்கம் 372-ஐப் பார்க்கவும்.

https://drive.google.com/file/d/1Ebv-8cFAvTJlCP3u7MdnMq1yG1quqXbL/view?usp=drive

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 இன் பிரிவு 374 க்கான பக்கம்368 testove.google.com/feldEby BofAvTCP307ManMaTy TougXbL/view?usp=drive

1. மேற்கண்ட கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் (திருத்தம்) 2024க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது
2. மேலும் கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் (திருத்தம்) 2024க்கு மன்ற அனுமதி வழங்கிய பின்பு, பொதுமக்களின் ஆட்சேபணை கோரவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், பொதுமக்களின் ஆட்சேபணை காலம் முடிவடைந்த பின்பு மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மற்றும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.00 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் : 49**

தருமபுரி நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.தினசரி புகைமருந்து அடிக்கவும், வீடு வீடாக செல்லும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கு Abate மருந்தும் வழங்கப்பட வேண்டியுள்ளது. தற்போது மழைக்காலம் வர இருப்பதால் கொசுப்புழு மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்க தேவையான தடுப்பு மருந்துகள் தேவைப்படுகிறது.

| வ.எண் | மருந்துகள் | அளவு | நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | Technical Malathion | 300 (lit) | M/s. Chemet wets & Flows pvt Ltd |
| 2. | Payrethrum | 500(lit) | Yesell Crips care |
| 3. | Temephose(Abate) | 100(lit) | Yesell Crips care |
| 4. | BT Powder | 300(Kg) | Ajay bio Tech (india ) ltd |

மேற்கண்ட மருந்துகள் TNMSC Approved நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும் அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.15.00 இலட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் : 50

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 2025-2026ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. நகராட்சி பகுதிகளில் நகராட்சி சார்பாக அனைத்து முகாம்கள் நடந்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தருமபுரி நகராட்சி சார்பில் ஜீலை 2025 முதல் அக்டோபர்-25 வரை முகாம்கல் நடைபெறவுள்ளது. முகாமிற்கு கணினிகள் ஒவ்வொரு முகாமிற்கும் தனித்தனியாக அமைக்க வேண்டியிருப்பதால் இப்பணினை மேற்கொள்ளவும் அதற்கான தோராண செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 51

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தருமபுரி ஆய்வு நாள் 05.05.2025யின் போது தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட பென்னாகரம் மெயின் ரோடு சந்தோஷ் தியேட்டர் அருகில் உள்ள மழைநீர் வடிகால்வாயை ஆய்வு செய்து, இக்கால்வாயினை அகற்றிவிட்டு புதிய மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் (கல்வெர்ட்) அமைக்குமாறு தெரிவித்துள்ளார்.

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 10 மற்றும் 09 பென்னாகரம் மெயின் ரோடு சந்தோஷ் தியேட்டர் அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள சிறுபாலத்தின் வழியாக பிள்ளையார் கோவில் தெரு, மயில் மண்டபம் தெரு, தட்சிணாமூர்த்தி மடம் தெரு, வ.ஊ.சி. தெரு மற்றும் காரியகார வையாபுரி தெருவில் உள்ள மழைநீர் மற்றும் குடியிருப்புகளில் பயன்படுத்தப்படும் கழிவுநீர் இச்சிறுபாலத்தின் வழியாக செல்ல முடியாமல் சாலைகளில் தேங்கியும், குடியிருப்பு வீடுகளில் கழிவு நீர் புகுந்து பொது மக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுவதால் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்வாயை அகற்றிவிட்டு புதியதாக அகலமான மழைநீர் வடிகால்வாய் சிறுபாலம் (கல்வெர்ட்) மற்றும் மூடு சிலாப் அமைக்க வேண்டியிருப்பதால் இப்பணியினை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் : 52

தருமபுரி நகராட்சி 2023-2024-ம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை செய்யப்பட்டு ஆண்டு க்ணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதில் பத்தி எண் 46ல் ஆண்டு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டதற்கு தணிக்கை கட்டணமாக ரூ.4,31,644/- உரிய அரசு தலைப்பின் கீழ் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தணிக்கை கட்டணம் ரூ.4,31,644/- செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

மா.லட்சுமி 4/8/25

நகர்மன்ற தலைவர்

தருமபுரி நகராட்சி.

2025

2025–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 08–ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 04.30 மணிக்கு தருமபுரி நகராட்சி அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்டரங்கத்தில் நடைபெற்ற அவசர கூட்டத்தின் தீர்மான நகல்

| பொருள் எண்கள் | தீர்மான எண்கள் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1 | 241 | பதிவு செய்யப்பட்டது |
| 2 முதல் 7 வரை | 242 முதல் 247 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 248 | பதிவு செய்யப்பட்டது |
| 9 முதல் 18 வரை | 249 முதல் 258 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 259 | பதிவு செய்யப்பட்டது |
| 20 முதல் 21 வரை | 260 முதல் 261 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 262 | பதிவு செய்யப்பட்டது |
| 23 | 263 | அங்கீகரிக்கப்பட்டது |
| 24 முதல் 28 வரை | 264 முதல் 268 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 269 | பதிவு செய்யப்பட்டது |
| 30 | 270 | அனுமதிக்கப்பட்டது |
| 31 முதல் 32 வரை | 271 முதல் 272 வரை | பதிவு செய்யப்பட்டது |
| 33 முதல் 34 வரை | 273 முதல் 274 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 35 | 275 | பதிவு செய்யப்பட்டது |
| 36 முதல் 39 வரை | 276 முதல் 279 வரை | அனுமதிக்கப்பட்டது |
| 40 | 280 | பதிவு செய்யப்பட்டது |
| 41 | 281 | அங்கீகரிக்கப்பட்டது |
| 42 | 282 | பதிவு செய்யப்பட்டது |
| 43 | 283 | அங்கீகரிக்கப்பட்டது |
| 44 முதல் 52 வரை | 284 முதல் 292 வரை | அனுமதிக்கப்பட்டது |

மா.லட்சுமி

நகரமன்ற தலைவர்

தருமபுரி நகராட்சி

12/8/2025